Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 29 ஆம்.நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 19 (16.10.2003) வியாழக்கிழமை இதழ்:16

**IIS**


**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## புலிகள் மீண்டும் பேச்சில் ஈடுபடவேண்டுமாயின்
# பொருத்தமான சமஷ்டி, இடைக்கால நிர்வாகம் அமைப்பதில் முன்னேற்றம் காண்பது அவசியம்!
## கனடிய வெளிவிவகார அமைச்சர் பெல் கிரஹம்



(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் ஈடுபட வேண்டுமானால், பொருத்தமான சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவதுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படுவதிலும் முன்னேற்றம் காணப்படவேண்டியது அவசியமாகும் என, கொழும்பு வந்துள்ள கனடிய வெளிவிவகார அமைச்சர் பெல் கிரஹம் தெரிவித்தார்.**

**அவர் கொழும்பில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்தாவது -**

நேரடிப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதில்லை என்ற நிபந்தனையை ஆறுமாதகாலமாக கடைப்பிடித்துவரும் விடுதலைப் புலிகள் அதனைக் கைவிட்டால் மாத்திரமே, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதியின் புனரமைப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

சமாதான நடவடிக்கைகளில் மீண்டும் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளுக்கு நான் மனப்பூர்வமான வேண்டுகோளை விடுக்கிறேன். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அவர்கள் பங்குபற்றுவது மாத்திரமல்லாது, தொடர்ந்தும் அதில் ஈடுபடுவது அவசியமாகும்.

வன்செயல் கலாசாரம் முடிவுக்கு கொண்டுவரப்படுவதன் அடிப்படையிலேயே சமாதானமாகவும், கௌரவத்துடனும் வாழவேண்டும் என்ற தமிழ் மக்களினதும், சகல இலங்கை மக்களினதும் அபிலாஷைகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

### மாம்பழம் சந்தியில் நேற்றும் விபத்து

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்தியில், இராணுவ பிக்கப் வாகனம் மோட்டார்சைக்கிளுடன் மோதியதில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமாலை 6.15 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில், மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரே காயமடைந்தார்.

தென்மராட்சி பகுதியிலிருந்து வந்து கொண்டிருந்த இராணுவ பிக்கப் வாகனம் - யாழ்.நகரிலிருந்து மோட்டார்சைக்கிளில் சென்ற இளைஞரை மோதியது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தலதாமாளிகை குண்டுவெடிப்பு; மூன்றுபேருக்கு மரணதண்டனை!

கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக, கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டிருந்த நால்வரில், மூவருக்கு- மரணதண்டனையுடன் சிறைத்தண்டனையும், ஒருவருக்கு- போதிய சாட்சியம் இல்லாததால் விடுதலை செயவதாகவும், கண்டி மேல்நீதிமன்றம் உத்தரவிட்டது.

1998 ஆம் ஆண்டு தலதா மாளிகை மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பான தீர்ப்பு - நேற்று கண்டி மேல்நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட 2 ஆவது எதிரியான மு.ஜீவராசாவுக்கு எதிராக, போதிய சாட்சியம் இல்லாமையால், அவரை விடுதலை செய்வதாக நீதிமன்றம் அறிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக திட்டவரைபு தொடர்பாக நோர்வே தரப்புக்கு தமிழ்ச்செல்வன் விளக்கம்

(ஒஸ்லோ)

நோர்வேக்கு சென்றுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகள், நேற்று ஒஸ்லோவில் - வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அயர்லாந்தின் டப்ளின் நகரில் இடைக்கால நிர்வாக திட்டவரைபு குறித்து, சர்வதேச சட்டநிபுணர்களுடன் ஆராய்ந்த புலிகள் தரப்புக் குழுவினர் - நேற்றுமுன்தினம் மாலை டென்மார்க்கிலிருந்து நோர்வேக்கு சென்றிருந்தனர்.

இக்குழுவினர், நேற்று நோர்வே வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பில், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலகிசன், விசேட சமாதானத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர்ந்த 1000 குடும்பங்களுக்கான கொடுப்பனவுகள் வங்கிக்கு அனுப்பி வைப்பு!

யாழ். குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து சென்று, ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர், மீளக்குடியேறிய ஆயிரம் குடும்பங்களுக்கு, மீளக் குடியமர்வுக் கொடுப்பனவுகள், யாழ். செயலகத்தினால், வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி - ஊர்காவற்துறைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 312 பேருக்கும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 298 பேருக்கும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 347 பேருக்கும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 43 பேருக்கும், மீள் குடியமர்வுக் கொடுப்பனவுக்கான பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள், உரியவர்களின் வங்கிக்கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர், ஆயிரத்தொரு குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு (10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போயுள்ள படைச் சிப்பாயை கண்டுபிடிக்குமாறு தந்தை முறைப்பாடு

552வது பிரிகேட் படைத்தளத்தில் பணியாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் காணாமல் போய்விட்டதாகவும், அவர் தொடர்பான தகவல்களைப் பெற்றுத் தருமாறும்கோரி, மனித உரிமைகள் ஆணைச் குழுவின் யாழ் அலுவலகத்தில், காணாமற்போன சிப்பாயின் தந்தையால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

552ஆவது பிரிகேட் தளத்தில் பணியாற்றி வந்தபோது, ரணசிங்க என்ற சிப்பாய், கடந்த ஆகஸ்ட் 19ஆம் திகதி முதல், அவர் வைத்திருந்த ஆயுதத்துடன் காணாமல் போய்விட்டதாக இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன சிப்பாயின் தந்தை அனுப்பிவைத்திருந்த இந்த முறைப்பாட்டு கடிதம் தொடர்பாக யாழ் மனித (10 ஆம் பக்கம் பார்க்க)

### தென்மராட்சிக்கு படையதிகாரிகள் விஜயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி உயர்பாதுகாப்பு வலயங்களை இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகரசபைத் விளையாட்டுமைதானத்துக்கு உலங்கு வானூர்தியில் படை உயர் அதிகாரிகள் வந்திறங்கினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பிணையில் விடுதலை

அரியாலை மாம்பழம் சந்தியில், அண்மையில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தினையடுத்து கைது செய்யப்பட்ட இருவர், நேற்று யாழ். நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்

அரியாலையைச் சேர்ந்தவர்களான ராமநாதன் ராம்தீசன், பாலசிங்கம் டயனகரன் ஆகிய இருவருமே பிணையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் பொங்குதமிழ் நிகழ்வு; முப்பதாயிரம் பேர் திரண்டனர்!

(மன்னார்)

**‘எமது நிலம் எமக்கு வேண்டும்’ எனும் தொனிப் பொருளில், முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்ட பொங்கு தமிழ் நிகழ்வு நேற்று மன்னாரில் நடைபெற்றது.**

நேற்று மாலை 3.30 மணிக்கு, மூன்று இடங்களிலிருந்து ஆரம்பமான ஊர்தி, நிகழ்வின் இடத்தை சென்றடைந்ததும், பொங்குதமிழ் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலிருந்து ஒரு பேரணியும், பஸ்நிலையம் அருகிலிருந்து மற்றைய பேரணியும், புனித சவேரியார் கல்லூரி அருகிலிருந்த மற்றைய பேரணியும் ஆரம்பமாகி நிகழ்வு நடைபெற்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

### படையினரின் அச்சுறுத்தல் மத்தியில் நேற்றைய பொங்குதமிழ் நிகழ்வு!

(மன்னார்)

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மன்னாரில் நிகழ்ந்தேறியிருக்கின்றது.

கடந்த வாரம் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரைச் சந்தித்த இராணுவத்தினரும், சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், தம்மால் இடையூறுகள் எவையும் ஏற்படாதென (10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.கல்வி வலயம் நடத்திய சைவநெறிப் போட்டி பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம் கல்வி வலயம் நடத்திய சைவநெறிப் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா, நாளை மாலை 2.30 மணிக்கு யாழ்ப்பாண வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்விவலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் - தொழிலதிபர் பேரம்பலம் நாகரத்தினம் முதன்மை விருந்தினராகவும், யாழ். பெரியபுல முன்னாள் அதிபர் செல்வி அ.கந்தையா சிறப்பு விருந்தினராக கலந்துகொள்வதுடன், பரிசில்களை திருமதி.தங்கமலர் நாகரத்தினம் வழங்கிக்கௌரவிப்பார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்று, பரிசில்கள் பெறும் மாணவர் விபரம் வருமாறு -

### எழுத்து

**பிரிவு 1**

வி.லக்ஷனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சு.மெர்ஜினி (புனித திரேசா மகளிர் கல்லூரி), சி.சுமிதா (புனித ஜோன் பொஸ்கோ).

**பிரிவு 2**

வா.நிஷாக்திகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), யோ.சரண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இ.கௌசிகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**பிரிவு 3**

சோ.நிருஷிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கி.டல்சினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), யோ.சுதர்சினி (திருக்குடும்ப கன்னியர்மடம்).

**பிரிவு 4**

கு.தர்ஷனா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பா.பிரவீராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.பிரதீபா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**பிரிவு 5**

வே.சிவாகரன் (யாழ்.மத்திய கல்லூரி), பா.சத்தியப்பிரியா (புனித திரேசாள் மகளிர் வித்தியாலயம்), ப.நிதர்சனா (திருக்குடும்பக் கன்னியர்மடம்).

### பண்ணிசை

**பிரிவு 1**

செ.பிரவீனா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ச.மயூதர்சனி (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), மு.மயூரதி (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

**பிரிவு 2**

தே.விதுர்ஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), க.அழகரசன் (யாழ். இந்துக் கல்லூரி), ர.நிருத்திகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

**பிரிவு 3**

ச.விஜயருக்ஷாயினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தெ.பவனுஜா (வேம்படி மகளிர் கல்லூரி), இ.வேணுகா (யாழ்.இந்துக்கல்லூரி).

**பிரிவு 4**

அ.அமிர்தலோசன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), த.கவாஸ்கர் (யாழ். இந்துக் கல்லூரி), சி.நதியா (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி).

**பிரிவு 5**

க.தர்ஷனன் (யாழ்.இந்துக் கல்லூரி), கு.சுகன்னியா (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி), த.காயத்திரி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

### பேச்சு

**பிரிவு 1**

பு.சுபிதா (யாழ்.இந்துமகளிர் ஆரம்ப பாசடாலை), சு.சுகன்னியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நீ.நிரோஜன் (நல்லூர் ஞானோதய வித்தியாலயம்).

**பிரிவு 2**

பா.கர்சிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கு.சிந்துஜா (கொக்குவில் இராமகிருஷ்ண மிஷன்), இ.டர்சினி (பெரியபுலம் மகா வித்தியாலயம்).

**பிரிவு 3**

அ.அனுஷியா (கொக்குவில் இந்துக் கல்லூரி), இ.லோகப்பிரதாப் (யாழ். இந்துக்கல்லூரி), சி.காயத்திரி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

**பிரிவு 4**

ந.ரேணுகா (பெரியபுலம் மகா வித்தியாலம்), தெ.ஹர்சன் (யாழ்.மத்திய கல்லூரி), வை.மீரா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**பிரிவு 5**

ம.அன்பரசன் (யாழ்.இந்துக் கல்லூரி), தே.டசிகா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கு.துசியந்தன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

### சகலகலாவல்லி மாலை

**பிரிவு 1**

ஜெ.லக்சி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), க.சுகேதா (புனித ஜோன் பொஸ்கோ), பு.பானுப்பிரியன் (புனித ஜோன் பொஸ்கோ).

**பிரிவு 2**

ச.றுக்ஷிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), த.சிவாஜினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கு.யேசுதாசன் (கொக்குவில் கிழக்கு நாமகள்).

**பிரிவு 3**

ர.பிரகஸ்வினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சி.சர்மியா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பா.அனுஜன் (கொக்குவில் கிழக்கு நாமகள்).

**பிரிவு 4**

த.ஜெயடினேஸ் (யாழ்.இந்துக் கல்லூரி), கி.வலஜி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.காயத்திரி (கொக்குவில் இந்துக்கல்லூரி).

**பிரிவு 5**

ம.தயாபரன் (யாழ்.மத்திய கல்லூரி), த.வதனகீர்த்தனா (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி), ரா.தக்ஷி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

## சின்னஞ்சிறு செய்திகள்

### அடையாள அட்டை கண்டெடுப்பு

உடுவில் மல்வம் பகுதியைச் சேர்ந்த பொன்னையா - தம்பிராசா என்பவருடைய தேசிய மற்றும் விசேட அடையாள அட்டைகளும், வங்கிச் சேமிப்பு புத்தகம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்தில் உரியவர் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால், வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்படும் வாராந்த நிகழ்வில் - நாளை 10.30 மணியளவில் பெரிய புராணம் பற்றிய சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதனை - யாழ்ப்பாண கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். அறிமுகவுரையை சிவ.ஆறுமுகசுவாமி ஜே.பி. அவர்கள் நிகழ்த்துவார்கள். (17)

### கூடைப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டி

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் வருடாந்தம் நடத்தும் - கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி, இன்று மாலை நான்கு மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும்.

இன்றைய இறுதிப் போட்டியில், யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்.பற்றீசியன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

### பட்டச் சான்றிதழ் கண்டெடுப்பு

தியாகு கணேஸ்ராஜ் என்பவருடைய - 2001 ஆம் ஆண்டுக்கான யாழ். பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் கண்டெடுக்கப்பட்டு, விவசாய பீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் - ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு, விசாயபீடத்தின் உதவிப் பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ராஜா யாழ்ப்பாணம்.
பிரசாந், கிரண், நடித்த
வின்னர்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30.
9.30 (பு.நே)
(சி-1619)

திறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், ஜோதிகா, விவேக் நடித்த
தூள்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
Tuhedo
(சி-1618)

# பணிநிலை வேண்டுகை

வருவாய்ப்பகுதியின் ஆளுகையிலுள்ள புளியங்குளம், கிளிநொச்சி, வட்டக்கண்டல், பளை ஆகிய பகுதிகளிலுள்ள செயலகப் பணிக்குக் கீழ் வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தங்களது தன் வரலாறு அடங்கிய ( சுயவிபரம்) வேண்டுகைகளை 2003.10.20 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**பணிநிலைகள்:-**

01. ஆளுகை மேலாளர்
02. உள்ளகக் கணக்காய்வாளர்.
03. கணக்குப்பதிவாளர்.
04. எழுதுநர்
05. வெளிக்களப் பணியாளர்
06. வரி அறவிட்டாளர்.

**கல்வித்தகைமை**

<u>பணிநிலை 01, பணிநிலை 02.</u>

ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருத்தமான பல்கலைக்கழகக் பட்டப்படிப்பு அல்லது உயர் தேசிய டிப்ளோமா அல்லது க.பொ.த. (உ/த) உடன் ஐந்தாண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

<u>பணிநிலை 03, பணிநிலை 04.</u>

க.பொ.த. (உ/த) அல்லது க.பொ.த (சா/த) உடன் மூன்றாண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

<u>பணிநிலை 05, பணிநிலை 06,</u>

க.பொ.த. (சா/த) அல்லது ஓராண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

**வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி :-**

அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**

★ நாள்: 2003.10.25
நேரம்: காலை 09.00 மணி
இடம் :- வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்சாலை, பளை.

★ நாள்: 2003.10.23
நேரம்: காலை 09.00 மணி
இடம் :- வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

குறிப்பு: நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதி.

(506)

# கேள்வி அறிவித்தல்

## கமநல அபிவிருத்தி திணைக்களம் கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த இக்ராட (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகை | மீளளிக்க முடியாத தொகை |
|---|---|---|---|
| 1. காரைநகர் கமநல சேவை நிலைய கட்டட நிருமான வேலை | எம் 7 | ரூ.38000/- பணமாக அல்லது வங்கி உத்தரவாதம் ரூ.75000/- | ரூபா 250/- |

2. அரச நிறுவனங்கள் அல்லது இலங்கை நிருமான வேலைகள் ஒப்பந்தக்கார்களின் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நிருமாண வேலைகள் அபிவிருத்தி நிறுவனங்களின் (இக்ராட்) பெறுமதி அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதிகாட்டப்படுகின்ற ஒப்பந்தகாரர்களுக்கு இதற்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணத் தொகுதிகளை கமநல அபிவிருத்தி திணைக்களம் யாழ்ப்பாத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூ 38000 மும் மீளளிக்க முடியாத தொகையாக ரூ 250/- ஐயும் செலுத்தி 22.10.2003 பி.ப. 3.00 மணி வரை கடமை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
5. பூர்த்தியாக்கப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களின் முதற்பிரதியையும் இரண்டாவது பிரதியையும் தனித்தனியாக தபால் உறையிலிட்டு (சீல்) முத்திரையிடப்பட்டு பின்னர் இரண்டு தபாலுறைகளையும் ஒரு தபால் உறையிலிட்டு 31.10.2003 ஆம் திகதி பி.ப. 2. மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடியதாக மாவட்ட உதவி ஆணையாளர் கமநல அபிவிருத்தி திணைக்களம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும்.
6. கேள்விப்பத்திரப் படிவத்துடன் அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்விப் பத்திரப்பிணையாக (மீளச் செலுத்தப்படுகின்ற) உரிய தொகையைக் குறிப்பிட்ட உதவி ஆணையாளருக்குச செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை அல்லது கேள்விப்பத்திர காகிதாதிகளுடன் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கான விபரங்கள் இணைக்கப்பட்டிருப்பின் குறிப்பிட்ட வங்கிப் பிணை /உத்தரவாதத்தைக் கேள்விப் பத்திரப் படிவத்துடன் இணைத்துச் சமர்பித்தல் வேண்டும்.
7. சகல தபால் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் முதற்பிரதி இரண்டாம் பிரதி என்பதும் தபால் உறைகளில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்தவுடனேயே கேள்விப்பத்திரங்களை திறத்தல் குறிப்பிட்ட அலுவலகத்தில் நடைபெறுவதுடன் அந்த சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரகாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்கமுடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி யாழ்ப்பாண கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

ஒப்பம் : லூகஸ் இந்துருகல்ல
கமநல அபிவிருத்தி
திணைக்கள ஆணையாளர் நாயகம்,
தலைவர்,
திணைக்கள கேள்வி சபை.

கமநல அபிவிருத்தி திணைக்களம்,
42,ஸ்ரீமத் மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,
த.பெ.537 - கொழும்பு 07.

(சி-1678)

## இந்திய வம்சாவளியினருக்கு

# பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தால் தமிழர்களின் பலம் அதிகரிக்கின்றது

## கவலை தெரிவிக்கிறது சிஹல உறுமய

இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டமூலத்தினால், இலங்கையில் வாழும் தமிழர்களின் தொகை அதிகரித்துள்ளதாக, சிஹல உறுமய கவலை தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதனால், இலங்கையின் தென்பகுதி மாகாணங்களிலும் தமிழர்களின் எண்ணிக்கை விகிதாசாரம் அதிகரித்தள்ளதாக, அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

1986 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இது தொடர்பான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த போது, அதனை சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் எதிர்த்திருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சட்டமூலத்தினை ஆதரித்ததன் மூலம் அந்தக் கட்சிகளும், மலையகத்தைச் சேர்ந்த தொண்டமான் மற்றும் சந்திரசேகரனும் விடுதலைப்புலிகளின் தனி நாட்டுத் திட்டத்துக்கு உதவியுள்ளதாகவும், அவர் மேலும் விசனம் வெளியிட்டிருக்கின்றார்.

## குரங்குபாஞ்சான் செல்ல அனுமதி மறுப்பு சிஹல உறுமய பொலிஸில் முறைப்பாடு!

குரங்குபாஞ்சான் முகாமிற்குத் தம்மைச் செல்ல விடாமையை எதிர்த்து சிஹல உறுமய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது. கந்தளாய்ப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள இந்த முறைப்பாட்டில் அரசுக்கு சொந்தமான எந்தப் பகுதிகளுக்கும் செல்ல தமக்கு உரிமையுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த உரிமையை மறுத்ததன் மூலம் அரசு மனித உரிமைமீறலில் ஈடுபட்டுள்ளதாகவும், நீதியான விசாரணைகளின் மூலம் உரிய தீர்வு பெறப்பட வேண்டும் எனவும் சிஹல உறுமய தமது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திருமலை குரங்குபாஞ்சான் படை முகாமிற்கு சிஹல உறுமய கட்சியினர் செல்ல முற்பட்டபோது அதனைப் பொலிஸாரும் படையினரும் தடுத்து நிறுத்தியமை தெரிந்ததே. இதனைக் கண்டித்தே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக வெளிநாட்டு தூதுவர்கள் பலருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்தார்.(01)

### இந்திய மீனவர்கள் மன்னாரில் அத்துமீறல்

மன்னார் - பேசாலை பகுதியில் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடி றோலர்கள் மீனவர்களது படகுகள், வலைகள் என்பனவற்றை அழித்துள்ளன.

நான்கு இந்திய றோலர்களே இந்த நாசவேலையை மேற்கொண்டன.





கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்ற கண்காட்சி மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தேசியக் கொடியேற்றிவைப்பதையும், பயிற்சியை நிறைவு செய்த யுவதியொருவருக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## வாழைச் சேனையில் கடத்தப்பட்ட வாகனம் புலிகளால் மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது

வாழைச்சேனைப் பொலிஸில் கடந்த மாதம் 21 ஆம் திகதி சித்தாண்டியில் வைத்து கடத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்ட டொல்பின் வாகனம் புலிகள் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து மீட்கப்பட்டு உரிமையாளரான வாழைச்சேனையைச் சேர்ந்த நாகூர் அமீர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வாழைச்சேனையில் இடம்பெற்ற தமிழ் - முஸ்லிம் வலய சந்திப்பின் போது மேற்படி வாகனம் கடத்தப்பட்டது தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவால் பிரஸ்தாபிக்கப்பட்டது. இது தொடர்பாக விரைவில் உரிய விசாரணைகள் மேற்கொள்வதாக புலிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

இந்த மாதம் 12 ஆம் திகதி நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜா, முஸ்லிம் பிரதிநிதிகளை அழைத்து கரடியனாற்றில் வைத்து வாகனத்தை ஒப்படைத்தது டன் கடத்தல் சம்பவத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை எனவும், இது தொடர்பாக கொள்ளையர் குழு ஒன்று கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

முஸ்லிம் பிரதிநிதிகள் குழு வாழைச்சேனைப் பொலிஸாரிடம் வாகனத்தை ஒப்படைத்ததுடன் வாகனம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

கடந்த செவ்வாய் அன்று வாகனம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு நீதிவான் எம்.எச்.எம்.அஸ்மீரிடம் அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் வாகனத்தின் உதிரிப்பாகங்கள் சில கழற்றப்பட்டிருப்பதாகவும், சில மாற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வாகனச் சொந்தக்காரருக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென உத்தரவிட்ட நீதவான் டிசம்பர் 11 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

## கடற்படையின் தாக்குதிறனை அதிகரிக்க இஸ்ரேல் உதவி!

(கொழும்பு)

இலங்கையின் கடற்படைக் கலங்களில் தாக்குதல் வலிமையை அதிகரிக்கும் வகையில் ஆலோசனைகளை வழங்குவதற்காக, இஸ்ரேலிய கடற்படை நிபுணர்கள் இலங்கை வந்துள்ளனர்.

இலங்கையில் சில தினங்கள் தங்கியிருக்கும் இஸ்ரேலிய நிபுணர் குழுவினர், கடற்படையை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

அத்துடன், கடற்படையினரின் கப்பல்கள், படகுகளின் தரங்களைப் பரிசீலணை செய்து வருவதுடன், அவற்றின் தரத்திற்கேற்ப நவீன ஆயுதங்களைப் பொருத்தி, அவைகளை இயக்குவது தொடர்பான பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

## நான்கு நாள் விஜயமாக ரணில் இந்தியா செல்வார்

(கொழும்பு)

நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போதைய சமாதான முன்னெடுப்பு உட்பட, பல்வேறு விடயங்கள் பற்றி இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பிரதமருடன், முக்கிய அமைச்சர்களான வெளியுறவுத்துறை அமைச்சர் ரிரோன் பெர்னான்டோ, விஞ்ஞான பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலக ஆகியோரும் இந்தியாவிற்குச் செல்லவுள்ளனர்.

இவர்கள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி, வெளிநாட்டு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஸ் மிஸ்ரா, மற்றும் பலரைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

அத்துடன், இந்திய எதிர்க் கட்சித் தலைவி சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் குஜ்ரால் ஆகியோரையும் சிறிலங்காப் பிரதமர் தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.



போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அரசியல் ஆலோசகர் ஜியர் சியபோராவுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம்.

## புனரமைப்புப் பணிகளுக்கு இந்தியா 300 கோடி ரூபா!

### வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் தமிழர் பகுதிகளைப் புனரமைக்க இந்தியா மேலும் 300 கோடி ரூபாவை வழங்கவுள்ளதாக, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்திய - இலங்கை கூட்டு ஆணைக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்க இந்தியாவிலிருந்து புறப்பட்ட அவர், பயண வழியில் சென்னை விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசும்போதே, இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளதாகக் கூறிய அவர், இந்திய-இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது, தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவது குறித்து விவாதிக்கப்படுமெனவும் தெரிவித்தார். இலங்கையில் ஏற்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளை புனரமைக்க, இலங்கை அரசுக்கு இதுவரை 450 கோடி ரூபா நிதியை இந்தியா வழங்கியுள்ளதாகவும், மேலும் 300 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்படுமெனவும் ஜஸ்வந்த் சின்ஹா மேலும் தெரிவித்தார்.

இந்தப் பயணத்தின்போது, இந்திய முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக, தமிழீழத் தேசியத் தலைவரை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு கோருவீர்களா என செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு, தேவையேற்பட்டால் அவ்வாறான கோரிக்கை மீண்டும் விடுக்கப்படுமென்வும் அவர் தெரிவித்துள்ளார்.

### சமுர்த்தி உத்தியோகத்தருக்கு பயிற்சி வகுப்பு

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் பரீட்சைக்கான, சமுர்த்திப் பாடத்திட்டம் தொடர்பான பயிற்சி - எதிர்வரும் 22 ஆம் திகதி, புதன்கிழமை - யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளரால் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சி வகுப்பில், கலந்துகொள்ளும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - தத்தமது பெயர் விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## திராய்க்கேணி அபிவிருத்திச் சங்கத் தலைவர் அக்கரைப்பற்றுப் பொலிஸாரால் விசாரணை!

அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி கிராமத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிரமதானப் பணியில் ஈடுபட்ட மக்கள் பாரிய மனித எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்ட புதைகுழி ஒன்றை தோண்டியதை அடுத்து திராய்க்கேணி கிராமத்திற்கு ஊடகவியலாளர்கள் பலர் படையெடுத்து வருகின்றனர்.

இதேவேளை நேற்றுக் காலை அக்கிராமத்தைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சி.கார்த்திகேசு என்பவரை அக்கரைப்பற்றுப் பொலிஸார் விசாரணைக்கு என அழைத்துச் சென்று அவரிடம் வாக்குமூலங்களைக் பெற்றுள்ளனர்.

இப்புதைகுழி சம்பந்தப்பட்ட விடயத்தில் அக்கரைப்பற்று பொலிஸார் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அந்தக் கிராம மக்களின் முக்கிய பிரமுகர்களை தனியே பிடித்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருவது பற்றி பொதுமக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவிடம் பொதுமக்கள் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் பிரதம மந்திரி, பாதுகாப்பு அமைச்சர் உட்பட பலருக்கு கடிதம் மூலம் முறைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

# இளைஞர்களின் எழுச்சியில்தான் சமுதாயத்தின் வாழ்வு தங்கியுள்ளது

## இளைஞர் கழக ஆண்டுவிழாவில் உரை

இளைஞர்களுடைய எழுச்சியிலும், வீழ்ச்சியிலும்தான் சமூதாயத்தின் வாழ்வும், தாழ்வும் தங்கியுள்ளது. இதனை இளைஞர்கள் உணரவேண்டும் என, உடுவில் கமநலகேந்திர நிலையத் தலைவர் செ.இலகுநாதன் தெரிவித்தார்

இணுவில் கிழக்கு இளைஞர் கழக ஆண்டு விழாவில், சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இளைஞர் கழகத் தலைவர் ச.சிறிமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ரீ.சிவதெட்சணாமூர்த்தி பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

இலகுநாதன் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் - இன்று மேலைததேய நாடுகள் அறிவியல் ரீதியிலே பெரிதும் மேலோங்கிவிட்டன. அங்குள்ள சிறு குழந்தைக்கள் கூட தொழிநுட்ப அறிவு மிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆனால், எமது நாடு இந்த விடயத்திலே வெகுவாகப் பின்தள்ளி நிற்கின்றது. இளைஞர்கள் தனியே ஏட்டுக் கல்வியை மட்டும் கற்றுவிட்டு, வேலை வாய்ப்புக்களைத் தேடிச்செல்கிறார்கள். இந்தநிலை மாறவேண்டும். தொழில் வாய்ப்பை நோக்கிய கல்வி முறை எனக் கருத்தும்போது, தொழிநுட்ப அறிவுமிக்க கல்வியை பெற்றுக் கொள்ளவேண்டும்.

இன்று சமுதாயத்திலுள்ள பெரியவர்கள் - எமது இளைஞர்கள் மீது குற்றம் சுமத்துகிறார்கள். அந்த குற் றச்சாட்டிலிருந்து இளைஞர்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

எமது தேசவிடுதலைகூட இளைஞர் சமுதாயம் ஒன்றினுடைய முயற்சியின் விளைவாகவே கருக்கொண்டு, இன்று உருப்பெற்றுள்ளது. எனவே, இளைஞர்களுடைய கைகளிலேதான் இந்த நாட்டினுடைய, உலகத்தினுடைய எதிர்காலம் தங்கியுள்ளது.

சமூகம் இளைய சமுதாயத்திடமிருந்து நிறையவே எதிர்பார்க்கிறது. அவை முழுவதையும் நிறைவேற்றமுடியாது விட்டாலும், ஓரளவிற்காவது நிறைவுசெய்ய இளைஞர்கள் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்வில் இணுவில் வடக்கு பகுதியிலிருந்து இந்த வருடம் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கு - அவர்களது பெயர்களில் ஆரம்பிக்கபபட்ட வங்கிக்கணக்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அத்தோடு, இளைஞர் கழகத்தினரால் நடாத்தப்பட்டுவரும் தட்டச்சு வகுப்புகளில் சித்திபெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

அதேவேளை, இளைஞர் கழகத்தினர் தமிழ்த் தகவல் தொழிநுட்ப ஒழுங்கமைப்புடன் இணைந்து நடத்திவரும் கணினிப் பயிற்சி நெறியின் முதற்கட்டப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்த முடிவுகளை நிலைய விளம்பரப்பலகையில் பார்வையிடலாம் என இளைஞர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# தீவக மாவீரர் நினைவாக உதைபந்தாட்ட போட்டிகள்

ஊர்காவற்றுறை காந்திஜி விளையாட்டுக்கழகமும், காந்திஜி சனசமூக நிலையமும் இணைந்து- மாவீரர்களின் ஞாபகார்த்தமாக உதைபந்தாட்டப் போட்டியை நடாத்தியிருந்தனர்.

இறுதிப்போட்டியில் - தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் (A) பிரிவை எதிர்த்து, வேலணை - துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் (A பிரிவு) அணியுடன் மோதினார்கள். இந்தப் போட்டியில் -


2:0 என்ற கோல் கணக்கில், தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் - வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகத்தை வென்று மாவீரர்வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

இத்தொடரில் 3 ஆம் இடத்தைப் புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் பெற்றது. போட்டிகள் அனைத்தும் -தீவக விடுதலைப் புலிகளின் விளையாட்டுப்பகுதியின் அனுசரணையின்கீழ் காந்திஜி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக -எ.எவ்.செபமாலை முத்து, எஸ். திருநாவுக்கரசு, எஸ். டெனிஸ் ஆகியோர் கடமை புரிந்தனர். (58)

# நூலக வாரத்தை முன்னிட்டு சுவரொட்டிப் போட்டிகள்

பாடசாலை நூலகவாரத்தை முன்னிட்டு, வலயமட்டத்தில் சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஓவியத்துக்கான மகுட வாக்கியமாக - ஐந்து சொற்களுக்குள் நூலக வாசிப்புத்திறன் பற்றியதாக அமைதல்வேண்டும்.

ஏ-3 தாளில் வரையப்பட்டு, நீர் வர்ணம் அல்லது கிறயோன்சோக் அல்லது வர்ணப் பென்சில்களால் நிறம் தீட்டப்பட்ட ஓவியங்களை - எதிர் வரும் 17 ஆம் திகதிக்குமுன், வலயப் பணிமனைகளில் ஒப்படைக்க வேண்டும். தரம் 6-13 இற்கு இடைப்பட்ட மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றமுடியும். இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு 27 ஆம் திகதி நடைபெறும் வலய மட்ட நூலக விழாவில் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும். (101)






நெல்லியடி மக்கள் வங்கியினால், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் "சிசு உதான" சேமிப்பு அலகு ஆரம்பிக்கப்பட்டபோது, அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கி யாழ்.பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதையரை - கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் மலர்மாலை அணிவித்து, வரவேற்பதை முதலாம் படத்திலும், மக்கள் வங்கி நெல்லியடி முகாமையாளர் எம்.ஏ.எஸ். சிவலிங்கம் - அன்றையதினம் புதிய கணக்கு ஆரம்பித்த மாணவி ஒருவரிடம் இருந்து பணத்தைப் பெறுவதை இரண்டாம் படத்திலும் காணலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### தவறவிட்ட பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் மஹோற்சவ காலத்தில்- பொதுமக்களால் தவறவிடப்பட்ட பொருட்கள் - பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், உரியவர்கள் சரியான ஆதாரங்காட்டி, பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (17)

### மரக்கன்றுகளில் நோய்த்தாக்கம்

யாழ்.வனவளத் திணைக்களத்தினால் நாற்று இடப்பட்டு, வளர்க்கப்பட்டு வரும் பயன்தரு மரக்கன்றுகள் - ஒருவித நோய்த்தாக்கத்தினால் பாதிப்புற்றுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் இதற்கென நாற்றுமேடைகள் உருவாக்கப்பட்டு - மலைவேம்பு, பலா, நிழல் வாகை போன்ற ஆயிரத்துக்கு மேற்பட்ட பல இன மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வந்தன. திடீரெனத் தோன்றிய நோய்க்காவியினால், ஐநூறுக்கு மேற்பட்ட மரக்கன்றுகள் பாதிப்படைந்துள்ளன.

இவை யாவும் வளர்ந்த பின்னர்- அரச திணைக்களங்களிற்கும், பொதுமக்களுக்கும் வழங்கப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### துடுப்பாட்ட போட்டி முடிவுகள்

முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்தமாக, கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினால், நடத்தப்பட்ட 6 வீரர்கள் பங்குபற்றும், 5 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் - இறுதிப்போட்டியில்- சென்ர லைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து விளையாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 16 ஓட்டங்களினால் வெற்றிபெற்று, சம்பியனானது. இச்சுற்றுப் போட்டியின் 3 ஆம் இடத்தினைக் கொக்குவில் கே.சி.சி (A) அணி பெற்றுக் கொண்டது.

2001 ஆம் ஆண்டுமுதல், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் கடந்த இரு வருடங்களும் பற்றீசியன் அணி யினர் வெற்றிபெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

# ஆங்கில தினப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி சாதனை

திருகோணமலையில் நடைபெற்ற மாகாணமட்ட ஆங்கிலதினப் போட்டியில் - உடுவில் மகளிர் கல்லூரி சிறந்த சாதனையை நிலைநாட்டியுள்ளது. இப்போட்டியில் கலந்து கொண்ட ஆரம்பப்பிரிவு - நாடகம், குழுப்பாடல் ஆகியவற்றில் முதலாம் இடங்களையும்,

இடைநிலைப் பிரிவு - குழுப்பாடல், உரையாடல் என்பவற்றில் இரண்டாம் இடத்தையும்

இடைநிலைப் பிரிவு - நாடகத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

ஆரம்பப்பிரிவு நாடகம் - முதலாமிடம், ஆரம்பப்பிரிவு குழுப்பாடல் - முதலாமிடம், இடைநிலைப் பிரிவு நாடகம் - மூன்றாமிடம், இடைநிலைப் பிரிவு குழுப்பாடல் - இரண்டாமிடம், சிரேஷ்ட உரையாடல் நாடகம் - இரண்டாமிடமும் பெற்றன.

பேச்சு, எழுத்தாக்கப் போட்டிகளில் -

1 ஆம் இடம் - உ.சகானா, 2 ஆம் இடம் - தே.டிலானி, 2 ஆம் இடம் - த.கார்த்திகா, 3 ஆம் இடம்- சோ. சாந்தி, 3 ஆம் இடம் - போ. ஜோய் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# மருதங்கேணியில் குடியேறியோருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள - முள்ளியான், செம்பியன்பற்று வடக்கு, வத்திராயன் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு - மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இதற்கான காசோலை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், விரைவில் இப்பகுதி மக்களுக்கு, கொடுப்பனவு வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (17)

## வாழ்க வளமுடன்

### இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### இரண்டாவது அகவையில்



பெயர் : சிந்துஜா
முகவரி : பன்னாகம் தெற்கு, சுழிபுரம்.

### மூன்றாவது அகவையில்

பெயர் : தி.அபிஜா
முகவரி : 06 ஆம் வட்டாரம், அனலைதீவு .



### ஐந்தாவது அகவையில்



பெயர் : ந.மதுநுஜா
முகவரி : 'பெரியாட்டி', கோப்பாய் வடக்கு, கோப்பாய்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி :------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம

# தக்காளியை பயிரிடும் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி.....)*

**02.) பற்றீரியப் புள்ளி**

இது தக்காளிப்பழங்களில் பொதுவாக ஏற்படுகின்ற பற்றீரியல் நோயாகும். சூழல் நிலைப்பாடு வெட்பமாகவும் (வெப்பநிலை உயர்வு நிலையிலும்), ஈரலிப்பு உடையதாகவும் வெளித்தோன்றும். இந்த நோயானது, ஒரு பொழுதும் மையப்படுத்திய வளையங்களைக் கொண்ட அடையாளங்களைக் கொண்டிருப்பதில்லை.

**கட்டுப்பாடு**

- சுழற்சிப் பயிர்ச்செய்கை.
- தூய வித்து பாவனை.
- வித்து பரிகாரம்.

**03) முற்கூற்று வெளிறல் / முந்திய வெளிறல்**

இது தக்காளித் தாவரத்தின் இலைப்பகுதியையும், பழத்தையும் தாக்கும் நோயாகும்.

அடையாளம் - கறுப்பு அல்லது மண்ணிறமாக 1/4 அல்லது 1/2 அங்குல விட்டமாக, உறுதியாகச் சற்று குழிவடைந்து காணப்படும்.

மிகநுணுக்கமாக அவதானிக்கும்போது, மையவழிப்படுத்திய வளையங்கள் அவதானிக்கப்படும். இத்தாக்கம் பழக்காம்பின் முடிவுப்பகுதியில் பொதுவாக ஆரம்பிக்கப்படுகிறது.

**Alternaria** இலைப்புள்ளியும், இந்நோயும் ஆரம்ப அடையாளங்களில் ஒத்துக் காணப்படுவதால், பிரித்து அறிதல் கடினமானதாக இருக்கும். ஏனெனில், இரண்டு நோய்க் காரணிகளும் ஒரே சாதியைச் சேர்ந்தவை. எனினும், குளிர்ந்த ஈரப்பாங்கான நிலைமைகளில் நோய் விருத்தியானது - பிரித்து அறியக்கூடியதாக உள்ளது.

இப்பங்கசுவானது, ஏற்கனவே நோய்த் தொற்றலுக்கான தாவரத்தின் எஞ்சிய பகுதிகளில் தமது தகாத காலங்களைக் கழிக்கின்றன. இக்காலப்பகுதியானது, சிலசமயங்களில் பல வருடங்களாகக்கூடக் காணப்படுகின்றது.

**நோய்க் கட்டுப்பாடு**

- நோய்த் தொற்றற்ற விதைப்பாவனை.
- சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை.
- **Plostic mulxch** உபயோகம்.
- பங்கசு கொல்லி பாவனை - மனப் (MANAP)

**04) ALTERNARIA**

பொதுவாகப் பழத்தொற்றே அவதானிக்கப்படுகிறது. இத்தொற்றானது பச்சைக்காய்களில் ஏற்பட்டு, சிறிய மணணிறமான புள்ளிகளாக விருத்தியடைந்து, பின்னர் குழிவடைந்து, மஞ்சள் நிறமான வளைய அமைப்பாகச் சுற்றிக் காணப்படும். தொடர்ந்து இவ்வடையாளம் பெரிதாகி, கடுமையான மையவழி வளையங்களைத் தோற்றுவிக்கும். பழம் முதிரவடைந்ததும், நோய் பரம்பல் நிறுத்தப்பட்டுவிடும். அறுவடையின்போது, பொதுவாக வெளிக் கண்ணுக்குப் புள்ளிகள் தெரியமாட்டாது. ஆனால், அறுவடையின்பின், 3-4 நாட்களால் இவை நன்றாக வெளித்தெரியும்.

முற்றிய பழத்தில் ஏற்படும் தொற்று, பொதுவாகக் கறுப்பு மதுவம் எனப்படுகிறது. கட்டுப்பாடு வழமையானவைகள்.

**05) பின்கூற்று வெளிறல் / பின்வெளிறல் (CALEBLIGHT)**

அண்மைக்காலங்களில் உருளைக்கிழங்கு பயிரிடும் பிரதேசங்களில், இந்நோய்த்தாக்கமானது அதிகரித்து வரும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

**இந்த நோய்க்கான காரணிகள்**

இது தக்காளி, உருளைக்கிழங்கு, கத்தரி போன்ற பயிர்களைத் தாக்கி வருகிறது. அது மட்டுமல்லாது, பொதுவாக எல்லா **Solanaceae** குடும்ப பயிர்கள் எல்லாவற்றையும் இலகுவில் தாக்குகின்றது.

ஈரலிப்பான குளிர்ந்த பிரதேசங்களில் இந்நோய்த் தாக்கம் அதிகமாகக் காணப்படும். பொதுவாக நோய்த்தொற்று பழத்தின் கழுத்து பகுதியில் ஆரம்பிக்கிறது. இது இலைத்தொற்றைத் தொடர்ந்து நடைபெறுகின்ற தொற்றாகும்.

கிறிஸ் நிறமான பச்சை சேர்ந்த மண்ணிறமான அடையாளமே இதற்குரிய சிறப்பு அடையாளமாகும். இந்த நிறமாற்றமானது, முழுப்பழத்தையும் மூடிவரும் வரைதொடரும். இத்தொற்று அடைந்த பழம் - உறுதியாகத் தொடர்ந்து காணப்படலாம் அல்லது சிலவேளைகளில் நொதுமல் அடையலாம்.

**கட்டுப்படுத்தல்** - பங்கசு கொல்லி பாவனை

விவசாய இரசாயனங்களின் பாவனையைக்
கூடுமானவரை குறையுங்கள்.
நாடும் வளம் பெறும்.

# கொமர்ஷல் வங்கி மீண்டும் இலங்கையின் ஆண்டிற்குரிய சிறந்த வங்கியாகத் தெரிவு

**'த பாங்கர்' (The Banker) சஞ்சிகையின் அதியுயர் விருதினை 3 ஆவது தடவையாகவும் சுவீகரித்துக் கொண்டது.**

சர்வதேச வங்கிச் சமூகத்தின் சார்பில் செயற்படும் பிரசித்தவெளியீடான 'த பாங்கர்' சஞ்சிகை 2003 ஆம் ஆண்டுக்குரிய இலங்கையின் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியை மீண்டும் தெரிவு செய்துள்ளது. 'த பாங்கர்' சஞ்சிகையானது, பிரித்தானியாவின் 'பைனான்ஷல் ரைம்ஸ் லிமிட்டட்' (**Financial times Buisness Ltd**) என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டு, பிரதம நிர்வாக உயர் அதிகாரிகளிடையேயும், சிரேஷ்ட முகாமையாளர்களிடையேயும் வலம் வருகின்ற, உலகளாவியரீதியிலே பரந்துபட்ட வாசகர்களைக் கொண்ட ஒரு வெளியீடாகும்.

'த பாங்கர்' சஞ்சிகையானது கொமர்ஷல் வங்கியைப் பற்றிய அதன் பரிந்துரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

கொமர்ஷல் வங்கி மீண்டுமோர் உறுதியான சகல துறைச் செயற்பாட்டினை - 2002 ஆம் ஆண்டிலும் பெற்ற தன்மூலம், தனது நீண்டகாலக் கடனுக்கான தர நிர்ணயத்தை **SLAA+** என அண்மையில் தரம் உயர்த்தியதனால், தொடர்ந்து இம்முறையும் வெற்றிக் கேடயத்தைத் தனதாகிக் கொள்ள வழிசமைத்தது.

வங்கியின் நிதிச் செயற்பாட்டினைப் பற்றி மேலும் குறிப்பிடுகையில் - "இலங்கையிலுள்ள மற்றைய போட்டியாளர்கள் ஸ்திரம் அற்றிருக்கையில், கொமர்ஷல் வங்கிக்கு 2002 ஆம் ஆண்டும் ஒரு சிறந்த ஆண்டாகவே அமைந்துள்ளது. நிகர இலாபத்தை 20 வீத அளவில் உயர்த்தியதுடன், மூலதன வருவாயையும் (**ROE**) 17 வீதமாகப் பேணிவருகின்றது. அத்துடன், சொத்துக்களிலும் மூலதன முதல் வரிசை (**Tier 1**) பெறுபேற்றிலும் சிறப்புப் பெறுபேறுகளைக் காணக்கூடியதாக உள்ளது. அதேவேளையில், அதன் வினைதிறனைப் பொறுத்தளவில், 55 வீதம் மட்டிலான வருமான கிரயவீதம் என்பதும் உயர்வாகக் காணப்படுகின்றது" என உள்ளது.

ஐ.பீ.எம்.சேவர் (**IBM**) ஐ தரமுயர்த்துவதில், வங்கி முதலீடு செய்தமை, வங்கியின் கொடுக்கல் வாங்கல்களை விரைவாகவும், வினைத்திறனுடனும் செயற்படுத்துவதற்கு வழிகோலியது. இது தெரிவுக்கான மற்றும் ஓர் தகைமையாக அமைந்தது. மேலும் இன்ரநெற் வங்கிச் சேவையை - சாதாரண வாடிக்கையாளர்களுக்கும் விரிவுபடுத்தியதன் மூலம், காப்புறுதிக் கட்டணம், பொதுச்சேவைகளுக்கான கட்டணம், கிரடிட் காட் கட்டணம் என்பவற்றை அவர்கள் கணினி வலைப்பின்னல் மூலம் செலுத்துவதற்கு வசதி செய்தது. அத்துடன், வலைப்பின்னலினூடான விரைவு - பணப் பரிமாற்றத்தினை மேற்கொள்ளும் வசதியையும் ஆரம்பித்து வைத்தது.

கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு பதிவுகளின் நம்பமுடியாத தொகையையும், பரிமாணத்தையும் கருத்தில்கொள்ளும் போதும், இத்துறையானது கடந்த காலங்களில் எதிர்கொண்ட கஷ்டமான சந்தைச் சூழலை நோக்கும்போது, இந்த வெற்றியானது மிகவும் பெறுமதிமிக்கது என்கிறார் "த பாங்கர்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீபன் ரைம்வெல்.

"வங்கியானது 2003 ஆம் ஆண்டிற்குரிய சிறந்த வங்கியாக தொடர்ந்தும் மூன்றாவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதினால், கொமர்ஷல் வங்கியில் அனைவரும் பெருமை அடைகிறார்கள். உச்சநிலையினை அடைதல் மிகவும் கஷ்டமானது. அதனைத் தொடர்ந்தும் பேணுதல் ஊழியர்கள் ஒவ்வொருவரையும் சோதனைக்குள்ளாக்கியது. எனவே, வெற்றிக்கான பாராட்டுக்கள் அவர்களுக்கே உரியதாகும்" என கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநர் அமிதா குணரட்ணா வங்கிக்கு அளிக்கப்பட்ட கௌரவம் பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

நியூர்யோர்க்கிலிருந்து பிரசுரமாகும் "குளோபல் பினான்ஸ்" (**Global Finance**) என்ற வெளியீடு - கொமர்ஷல் வங்கியைத் தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையாகவும் இலங்கையின் தலைசிறந்த வங்கியாகத் (**Best Bank in Sir Lanka**) தெரிவு செய்துள்ளது. அத்துடன், பிஸ்னஸ் ருடே (**Business Today**) என்ற சஞ்சிகையும் - கொமர்ஷல் வங்கியை நாட்டின் முதற்தரக் கம்பனியாக (**No 1 Corporate in the Country**) அறிவித்துள்ளது.

# தொழில் வங்கி



| நிறுவனம் | உலக சுகாதார ஸ்தாபனம் | இலங்கை மின்சாரசபை |
|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | வைத்திய அதிகாரி (ஒப்பந்த அடிப்படையில்) | மின்னியல் எந்திரவியலாளர் (40 வெற்றிடம்) இலங்கை மின்சார சபையின் வகுப்பு II, தரம் II |
| அடிப்படைத் தகுதி | 1. வைத்தியப்பட்டம் 2. மருத்துவம், ரண வைத்தியம், பயிற்சிப் பதிவு | 1. எந்திரவியல் பட்டம் எந்திரவியல் பரீட்சையில் I ஆம், II ஆம் பகுதி சித்தி அல்லது அதே துறையில் / சமனான ஏதேனும் தகைமை 2. 35 வயதிற்கு மேற்படாதவர். |
| விண்ணப்ப முடிவு திகதி | உடனடியாக விண்ணப்பிக்கவும் | 23.10.2003 |

**தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.**




# பனைவள அபிவிருத்தியை மக்கள் மயப்படுத்துவோம்

ஒரு நாட்டின் மூலவளங்களும், மனிதவளங்களும் பூரணமாகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும்போதே, நாடு வளர்ச்சியடையும் என்ற அடிப்படைக் கோட்பாட்டுக்கு அமைய, வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தன்னுரிமை வளமாகக் கொண்ட பனைவளத்தின் பெருமையினையும், அதன் பயன்பாட்டுத் தன்மையினையும், பொருளாதார முக்கியத்துவத்தினையும் நாம் அறிந்து வைத்திருக்கவேண்டும்.

எமது வரண்ட பிரதேசத்தின் வளம்கொழிக்கும் தாவரமாகப் பனைவளம் நிறைந்திருப்பதால், மக்களது வாழ்வியலோடும், பயன்பாட்டிலும் பனைமரம் நெருங்கி இணைந்துள்ளது. ஆனால், போரினாலும் பல்வேறு உடனடித் தேவைகளுக்காகவும், புதிய விவசாய முயற்சிகளுக்கு நிலத்தைப் பயன்படுத்துவதாலும், நகர அபிவிருத்திக்காகவும், கட்டுப்பாடற்ற முறையிலும் பனைமரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது. பனைவளம் வீணாக அழிக்கப்படுவதனால் ஏற்படும் தாக்கம், பனைமரப் பரம்பலில் ஒரு வெற்றிடத்தை மாத்திரமன்றி, வடக்கு - கிழக்குப் பிராந்தியங்களின் சுற்றுப்புறச் சூழலிலும் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது கசப்பான உண்மையாகும்.

எனவே, இவற்றை ஈடுசெய்யவும், கடலோரங்களை அடுத்த நிலப்பகுதிகளை மணல் மாரியிலிருந்தும், சூறாவளியிலிருந்தும் காப்பாற்றுவதற்கு நாம் பன்மடங்காகப் பனைமரங்களை நாட்டவேண்டியுள்ளது.

- எங்கே பனையை நாட்டலாம்?
  - ★ விவசாயத்துக்குப் பயன்படாத தரிசுநிலங்கள்.
  - ★ கடற்கரையோரங்கள்.
  - ★ மண்ணரிப்புக்கு உட்படுகின்ற பிரதேசங்கள்.
  - ★ வீதியோரங்கள்.
  - ★ பெருவயல்களின் எல்லைப் பகுதிகள்.
  - ★ பொது இடங்கள்.
  - ★ வனப்பாதுகாப்பு எல்லைகள்.
- பனையைக் கூடுதலாக வளர்ப்பதன்மூலம், எவற்றைச் சாதிக்கலாம்? உணவுத் தட்டுப்பாட்டைப் போக்கிக் கொள்ளலாம்.
  - ★ மரத்தேவைகளை நிறைவுசெய்து கொள்ளலாம்.
  - ★ கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்து கொள்ளலாம்.
  - ★ தும்பு உற்பத்தியை அதிகரித்து, அந்நியச் செலவாணியை ஈட்டிக் கொள்ளலாம்.
  - ★ கால்நடை உணவுத் தேவைகளை ஈடுசெய்து கொள்ளலாம்.
  - ★ சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.
  - ★ விசேடமாகக் கடற்கரையோர, வரண்ட பிரதேச நுண்ணிய சூழலைப் பேணிக் கொள்ளலாம்.
  - ★ கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து, வறிய மக்களுக்கு வாழ்வளிக்கலாம்.
- பனையை எவ்வாறு நாட்டலாம்?

விதைகளை நேரடியாகவே நாட்டுதல். (இது பராம்பரிய முறை)

நாற்று மேடைகள் அமைத்து, பனை நாற்றுக்களைப் பொலித்தீன் பைகளில் வளர்த்து, பின்னர் தேவைப்பட்ட பிரதேசத்திற்கு இலகுவில் எடுத்துச் சென்று நடுதல். பாத்தியில் விதைகளை முளைக்க வைத்து, முளைத்த கிழங்கை நேரடியாக உடன் நடுதல்.



பனைவள உற்பத்திகள் எவை?

**✸ உண்டிப் பொருட்கள்**

பழம் + பழச்சாறு

பழம், பனாட்டு, ஜாம், கோடியல், ஜோஸ்,பாம்மெலோ, அல்வா, ஐஸ்கிறீம், இனிப்பு வகைகள், லோவைன், மதுசாரம், வினாகிரி, பெக்ரின், மிருக உணவு.

**கிழங்கு**

புழுக்கொடியல், ஒடியல்மா, பாம்போகா, பிஸ்கட், சொக்லேட், கேக், லட்டு, இனிப்பு வகைகள், புழுக்கொடியல்மா, உடன் கூழ், உடனடித்தோசை, வடை, பிட்டு, பேக்கரி உற்பத்திகள்.

**பூர்ந்துணர்வு [illegible]ு உற்பத்தி**

பதநீர், பனம்பாகு, பனைவெல்லம், பனம் கற்கண்டு, பனம் சீனி, கழிவுப்பாகு, சொக்லேட், இனிப்பு வகைகள், மதுசார உற்பத்தி, செறிவு குறைந்த மதுசாரம், வினாகிரி, பிறண்டி, விஸ்கி, மது உற்பத்தி.

**✸ உண்ணா பொருட்கள் -**

**ஓலை**

மிருக உணவு, கைப்பணி உற்பத்திகள், பாவனைப் பொருட்கள், வீடுமேய, வேலியடைக்க, அழகு உற்பத்தி, ஈர்க்கு, கூடைகள், உறி, சுளகு.

**நார்**

நார் பின்னல், இருக்கைப் பின்னல், கூடைகள், பெட்டிகள், தட்டுகள், கடகங்கள். *(06 ஆம் பக்கம் பார்க்க)*

# பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றீடான கண்ணாடி நாரிழை உற்பத்திகள்

சுயதொழில் முயற்சி ஒன்றினை எமது பிரதேசத்தில் ஆரம்பித்து, தொடர்ந்து நடத்துவது கடினம். அதிலும், வித்தியாசமான புதுவகையான பொருட்களை, நம்பிக்கையை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, உற்பத்தியில் ஈடுபடுவது மிகமிகக் கடினம். அந்த வகையில், நாவலடி வீதியில், யாழ்ப்பாணம் கண்ணாடி நாரிழை **(Jaffna Fiber glass)** என்ற பெயரில் - தண்ணீர்த் தாங்கி, கதவு, மீற்றர்ப்பெட்டி, குளியலறை பேசின் போன்றவற்றை உற்பத்தி செய்யும் என்.நித்தியானந்தத்தை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினோம். அவருடன் கூடவே தொழிலில் ஈடுபடும் எம்.திருநாவுக்கரசுவும் பங்குகொண்டார்.

அறிமுகத்தின் பின்பு, நீங்கள் இந்தத் தொழிலைத் தேர்தெடுத்தமைக்கான காரணத்தைக் கூறுவீர்களா? என்று உரிமையாளர் நித்தியானந்தனிடம் கேள்வியை ஆரம்பித்தோம்.

நான் படித்துக்கொண்டு இருக்கும்போது, **NAB (National Apperentice Board)** ஆல் 4 வருட பயிற்சிக்காக காரைநகர் சீனோருக்குச் சென்றேன். பயிற்சி முடிந்தததும் வெளிநாட்டு முகவர் ஒருவர்மூலம், 1982 ஆம் ஆண்டு பஹ்ரைனுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. 15 வருடங்களாக அங்கு வேலை செய்தேன். முதலில் படகு உற்பத்தியில் ஈடுபட்டேன். தொழிற்சாலை படிப்படியாக வளர்ச்சியடைந்த பின்னர் - தளபாடங்கள், தண்ணீர்த்தாங்கி என்று பல்வேறுபட்ட கண்ணாடி நாரிழை உற்பத்தியில் ஈடுபட்டேன். பதவியுயர்வு கிடைத்தது, ஜப்பானுக்கு ஒருமாத பயிற்சிக்காக அனுப்பினார்கள்.



நித்தியானந்தன் - திருநாவுக்கரசு

இருவருடங்களுக்கு ஒருமுறை இங்கு வந்துபோவேன். ஆனால், 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்விற்குப் பின்னர், நான் பஹ்ரையினுக்குப் போகவிரும்பவில்லை. பாதை திறப்பிற்கு பின்னர் - குளியல்றைபேசின்கள் கொழும்பிலிருந்து வந்ததைப் பார்த்துவிட்டு, எங்களுடைய தொழில் அனுபவத்தை மூலதனமாகக்கொண்டு, தொழிலில் நிலைக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் தொடங்கினோம் என்று நிறைவுசெய்ய பின்னர், திருநாவுக்கரசு தொடர்ந்தார் -

ஏன் கொழும்பிலிருந்து பொருட்களைக் கொண்டுவர வேண்டும். நாங்களே தரமானதை உற்பத்தி செய்வோம் என்று யோசித்து, உற்பத்தியில் ஈடுபடுகின்றோம்.

வாடிக்கையாளர்களின் தேவையை அறிந்தா உற்பத்தியில் ஈடுபடுகிறீர்கள்? என்று இடைமறித்தோம். இல்லை. ஆரம்பத்தில் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்து, தண்ணீர்த்தாங்கி செய்தோம். ஆனால், விற்பனை செய்ய முடியவில்லை. பின்னர் - ஒரு கடைக்குச் சென்று, எங்களுடைய உற்பத்திகள் பற்றிச்சொன்னோம். ஒன்றைக் காட்டும்படி கேட்டார்கள். காட்டினோம். அவர்கள் மூலம் முற்பணம் பெற்றுக் கொண்டு, வாடிக்கையாளருக்குத் தேவையானவற்றை அவர்கள் விரும்பும் நிறங்களுக்கேற்ப செய்துகொடுக்கின்றோம்.

இந்தத் தொழிலுக்கான முதலீடு சொந்தமானதா? அல்லது கடன் பெற்றுச் செய்கிறீர்களா? என்று வினவினோம். அதற்கு அவர் கூறினார் - சொந்த முதல் தான். இப்பொழுது கிட்டத்தட்ட 150,000 முதலிட்டுள்ளோம். விற்பனைகளைப் பொறுத்து, வங்கிக்கடன் பெறுவதற்கு யோசித்திருக்கிறோம்.

உங்களுக்குரிய மூலப்பொருட்களை எங்கிருந்து பெறுகின்றீர்கள்? என்றபோது - நித்தியானந்தன் தொடர்ந்தார். கொழும்பிலிருந்து இங்குள்ள கடைகளுககு மூலப்பொருட்கள் வருகின்றன. அதனைக் கொள்வனவு செய்கின்றோம். நேரடியாகக் கொழும்பிலிருந்து பெறுவதென்றால் - வேலைகள் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும். தற்போது 10, 15 கிலோகிராம் மூலப்பொருட்கள் போதுமானதாக இருக்கின்றன. கூடுதலாக எடுத்து வைக்க பணவசதியில்லை. யாழ்ப்பாணத்தில் இதனைக் கொண்டு, படகு மட்டுமே செய்கிறார்கள். நாங்கள்தான் இந்த உற்பத்தியில் ஈடுபடுகின்றோம். கொழும்பில்கூடக் கதவுகள் செய்ய இன்னும் தொடங்கவில்லை.

இடையில் நித்தியானந்தத்தின் மனைவி - தனது கணவர் பஹ்ரைனில் எடுத்த புகைப்படங்கள் மற்றும் பரிசுகளைக் காட்டுகிறார். அந்தப்பரிசு 10 வருடங்கள் திறமையாக வேலை செய்ததற்குக் கிடைத்ததாகச் சொன்னார்.

அவரைக் கண்டவுடன், நித்தியானந்தத்திடம் - உங்களுடைய தொழிலுக்குக் குடும்ப ஒத்துழைப்பு எவ்வாறு உள்ளது என்று கேட்டோம். மனைவியிடம் இருந்து நல்ல ஆதரவு கிடைக்கிறது. என்னை ஊக்குவிப்பார். தடைகள் எதுவும் இல்லை. பிள்ளைகளும் சேர்ந்து ஈடுபடுவார்கள். சுவாத்தியத்திற்கு முகமூடி போட்டுத்தான் வேலை செய்வோம் என்றவர் - தொடர்ந்து கூறினார்.

சனநடமாட்டம் இல்லாத, விசாலமான, காற்றோட்டம் அதிகம் இல்லாத இடமாக இருக்கவேண்டும். ஏனெனில், அச்சில் போட்டு பின்பு வெட்டும்பொழுது தூசு பறக்கும். இவை மரத்தில் படிந்து, பின் மழைபெய்யும்போது கழுவுப்பட்டுப் போகும். குடியிருப்புக்களுக்கு மத்தியில் வேலை நடக்கும்போது, தூசு தீங்கிழைக்கும். அதனால், நாங்கள் ஒதுக்குப்புறமான எங்களுடைய காணியில் வைத்தே இந்த வேலையைச் செய்கின்றோம் என்றார்.

புகைப்படங்களைப் பார்த்தவாறே - எவ்வாறு இப்பொருட்களை உருவாக்குகின்றீர்கள்? என்று அடுத்த கேள்வியைக் கேட்டோம். முதலில் அச்சு எடுக்கவேண்டும். பின்பு அச்சைப் பயன்படுத்தி, பொருட்களைச் செய்கின்றோம்.

வெளிநாட்டில் இருந்தபடியால் இந்தத் தொழில் தொடர்பான நுணுக்கங்களைக் கற்றோம். இங்கு ஒருவருக்கும் தெரியாது... இடையில் திருநாவுக்கரசு குறுக்கிடுகின்றார்.

வேலையில் ஆர்வமும், நுணுக்கமும் தேவை. (படத்திலுள்ள) தண்ணீர்த்தாங்கி இவரே வடிவமைத்தது. ஒருவரிடமும் நிபுணத்துவமும் பெறவில்லை. தொழிற்சாலை என்றால், ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொருவர் இருப்பார்கள். கோயிலுக்குத் தேவைப்படும் தூபி, அன்னம் போன்றவற்றையும் அச்சு எடுத்துக் கொடுத்துள்ளோம். அலுமீனிய அச்சு நெளியும். இது உடையாது. பழுது பார்க்கவும் முடியும் என்றார்.

போட்டிப் பொருட்கள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேள்வியை முடிப்பதற்கு முன்னர், திருநாவுக்கரசு சொன்னார் - எங்களுடைய உற்பத்தி தரமானது. ஆனால், பிளாஸ்டிக்குடன் ஒப்பிடும்போது, விலை அதிகம். அதனால், மக்கள் பிளாஸ்டிக்கையே கொள்வனவு செய்கின்றார்கள். மக்கள் ஒன்றை உணரவேண்டும். பிளாஸ்டிக் உக்காது. கதிரைகள் உடையும், நெளியும். ஆனால், கண்ணாடி நாரிழை உற்பத்திகள் காலப்போக்கில் மண்ணோடு மண்ணாகத் தானாகவே அழிந்துபோகும். சூழல்மாசடையும் சந்தர்ப்பம் இல்லை.

எங்களுடைய தண்ணீர் தாங்கியில் சேமிக்கப்படும் நீர் சூடாகாது, மணம் இருக்காது, பாசி பிடிப்பது குறைவு-பிடித்தாலும், சுலபமாகக் கழுவக்கூடியவாறு பளிங்குத் தன்மை உள்ளது. விரும்பிய இடத்திற்கும் நகர்த்தமுடியும். பழுது ஏற்பட்டால் சீர்செய்யமுடியும். பிளாஸ்டிக்கில் இந்த நன்மைகள் இல்லை. வெளிநாடுகளில் பிளாஸ்டிக் தண்ணீர்த் தாங்கி பாவிப்பதில்லை. இதனைத்தான் பாவிக்கின்றார்கள். விடயம் தெரிந்தவர்கள் வேண்டுகிறார்கள். 20 வருட உத்தரவாதம் தரமுடியும். அத்துடன், ஒரு வருடமாக விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஒருவரும் குறை சொல்லவில்லை. பழுது பார்க்கும் சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. பாதிப்பு ஏற்பட்டாலும், சீர்செய்துகொடுப்போம் என்றவரிடம், விளம்பரங்களை எவ்வாறு மேற்கொள்கிறீர்கள் என்று குறிக்கிட்டோம்.

இதுவரை எந்த விளம்பரமும் கொடுக்கவில்லை என்றவரிடம், என்ன காரணம் என்று வினாவினோம். விளம்பரம் கொடுக்கக்கூடிய பணவசதி எம்மிடம் இல்லை. ஆனால், தற்பொழுது துண்டுப்பிரசுரங்கள் அடித்து வெளியிடுவதற்கு யோசித்துள்ளோம். ஊடகங்களுக்குக் கொடுக்கும் பொழுது, தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால், துண்டுப்பிரசுரங்களை நாங்களாகவே அடித்துக் கொடுக்கும்போது, செலவு குறைவு. கடந்த மாதம் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் பங்குபற்றவே சிரமப்பட்டோம். நாங்களே முதல் போடவேண்டி ஏற்பட்டது.

கைத்தொழிலை ஊக்குவிப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் கடன்உதவி வழங்கும்போது, கச்சேரி ஊடாக உதவுவதாக அரச அதிபர் கூறியுள்ளார். எங்களுக்கு நிதி அதிகரித்து, தொழிலும் வளரும்போது, இன்னும் 10 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கலாம். தற்சமயம் எங்களுக்கு எப்போதாவதுதான் வேலை வருகின்றது என்றார்.



கண்ணாடி நாரிழையால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்


உங்களைப்போல் முயற்சி எடுத்துத் தொழிலை ஆரம்பிப்பவர்கள் குறைவு. அதற்குக் காரணம் என்ன என்று எம்முடைய இறுதிக் கேள்வியைக் கேட்டோம்.

அதற்கு திருநாவுக்கரசு என்னுடைய கருத்து என்னவென்றால் - வெளிநாட்டுப் பொருட்களின் மோகம் இங்கு அதிகம். கொழும்பிலிருந்து பொதி செய்துவரும் பொருட்களை வாங்குவதே மதிப்பு என்று நினைக்கிறார்கள். புதுமையான வகையில் பெயரை மாற்றியாவது, எங்களுடைய பொருட்களை விற்பனை செய்வோம் என்றார். இப்பொழுது இன்றைய நிலைப்பாடு இப்படித்தான் இருக்கின்றது, என்று சிரித்தவாறே கூறுகின்றார். பின் அவரே தொடர்கின்றார். கண்ணாடி நாரிழையில் இப்படியான பொருட்கள் செய்யலாம் என்று தெரியாமல் இருக்கின்றார்கள். பலருக்கு ஆச்சரியமாகக்கூட இருக்கின்றது.

இவ்வாறான தொழிலை இங்கு ஊக்குவிக்கவேண்டுமானால், ஓரளவிற்குக் கொழும்பிலிருந்துவரும் பொருட்களைக் கட்டுப்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் இங்கு உற்பத்திகள் பெருகும் என்று கூறிமுடித்தார்.

புறப்பட்டு வரும் பொழுது - ஒரு தொழில் முயற்சியாளனுக்கு இருக்கக்கூடிய ஊக்கம், வரும் இடர்களை ஏற்பது, புதுமைகளை விரும்புவது போன்ற பண்புக்ளுடன் - சூழல் மாசடைவதைத் தவிர்க்கநினைக்கும் இவரது முயற்சியையும் காணமுடிந்தமையானது, எமது பிரதேசத்தில் வித்தியாசமான சிறுதொழில்களை ஆரம்பிப்பது சிரமம் இல்லை என்றே நினைக்கத் தோன்றியது.

*நேர்காணல் –*
*சுபோதினி இராஜகோபால்.*




| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 40/= | 50/= | 30/= | 40/= | 35/= | 20/= |
| வெண்டிக்காய் | 20/= | 30/= | 30/= | 20/= | 40/= | 20/= | * |
| உருளைக்கிழங்கு | 60/= | 75/= | 60/= | 70/= | 65/= | 60/= | 60/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 30/= | 45/= | 35/= | 50/= | 60/= |
| பாகற்காய் | 50/= | 60/= | 100/= | 60/= | 35/= | 50/= | 30/= |
| கரட் | 20/= | 60/= | 50/= | 30/= | 60/= | 20/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 25/= | 30/= | 20/= | 15/= | 25/= | 20/= |
| முருங்கைக்காய் | 50/= | 100/= | 120/= | 60/= | 100/= | 70/= | 100/= |
| வெங்காயம் | 40/= | 45/= | 35/= | 35/= | 32/= | 38/= | 40/= |
| பச்சை மிளகாய் | 40/= | 60/= | 55/= | 40/= | 40/= | 30/= | 40/= |

## பனைவள அபிவிருத்தி

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**தும்பு**

உயரழுத்தத் துடைப்பம், கயிறு, நூல்கள், கைப்பணிகள்.

**எரிபொருட்கள்**

எரிபொருள், புகையிலை பதப்படுத்தல், சமையல், கைப்பணி, மிகையூக்க கரி என்பன.

**பனந்தண்டு**

வீடு கட்டுவதற்கு, வேலிக்கு, தளபாடங்கள், எரிபொருள், கைப்பணி உற்பத்திக்கு, உபகரணம்.

**பனைநுங்கின் மருத்துவ உபயோகம்**

**01) நுங்கின் மேற்தோல்**

துவர்ப்புச் சுவையுடையது, அதிகம் உபயோகமுடையது. இதில்தான் உயிர்ச்சத்து 'ஏ'யும், இரும்புச்சத்தும் அடங்கியுள்ளன. இதனால், இரத்தவிருத்தி அதிகம் உண்டாகும். வெப்பநோய் ஏற்பட்டு, ஒல்லியாக இருக்கும் சிறுவர்களுக்கு இது ஒரு நல்ல ஊட்டமாகும்.

**02) நுங்கின் சதை**

நுங்கின் சதைகளை உண்டு வந்தால், வயிற்றுக் கோளாறுகள் மறையும். மலச்சிக்கல், மூலச்சூடு, மல இறுக்கம்; வயிற்றிரைச்சல், வாயுத்தொல்லை முதலியன நீங்கும்.

**03) நுங்கின் நீர்**

தினமும் எலுமிச்சம்பழச்சாற்றுடன் கலந்து குடித்தால், இரத்தம் சுரந்து சுறுசுறுப்படையும்.

உண்மையில் பனை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட உற்பத்திப் பொருட்களைத் தரவல்லது.

பனைவளம் எமது பூர்வீகச்சொத்து மட்டுமல்ல எமது மண்ணில் சுயபொருளாதாரத்தின் சின்னமுமாகும்.

எனவே, மக்கள் தங்கள் சொத்துக்களை விழிப்புடன் பாதுகாக்கவேண்டும்.

"பனை வளமே எமது உண்மையான பொருளாதார வளமாகும்."

**பனை அபிவிருத்திச் சபை**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்புஆடல் தேற்றா தவர்.

-திருக்குறள்.

# நமது நோக்கு

## சந்தர்ப்பவாத அரசியலும் சுயநல அரசியல் தலைமைகளும்

சுயநலமும், சந்தர்ப்பவாதமும், கொள்கைகளை, சூழலின் அவசியம் கருதி மாற்றிக்கொள்ளலும், சிறிலங்காவின் அரை நூற்றாண்டுக்கும் அதிகமான கால ஜனநாயக அரசியல் பாரம்பரியத்தில், அரசியல்வாதிகளை நிரந்தரமாகவே பீடித்துள்ள ஆபத்தான குணாம்சங்களாகும்.

அரசியல் நேர்மை என்பதை நிரந்தரக் கேள்விக்குறியாக்கி விட்டுள்ள இந்த குணாம்சம்தான் இன்றைய சிறிலங்காவின் குறைபாடுகள், வீழ்ச்சிகள், இழப்புகள் மற்றும் துயரங்கள் அனைத்திற்கும் பிரதாண காரணியுமாகும்.

வாக்காளர்களை நிரந்தரமாக ஏமாளிகளாக வைத்திருக்க விரும்பும் அரசியல் ழூலோபாயக் கொள்கை வகுப்பாளர்கள் காலத்திற்குக் காலம் ஆட்சிப்பீடம் ஏறும் அரசியல் தலைமைகளுக்கும் அவர்களின் கட்சியினருக்கும் ஏற்ப - அவர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கும் இலக்குகளுக்கு ஏற்ப, தமது கோட்பாடுகளையும், தேசியநலன் தொடர்பான கருத்து நிலைப்பாடுகளையும் கூட பொறுப்பற்ற முறையில் மாற்றிக் கொள்வதுதான் பெரும் துயரமாகும்.

ஒரு தேசத்தின் நாசத்திற்கு இதுவே போதுமானதாகும். எந்தவொரு அரசியல் கட்சியும், கட்சித்தலைமையும், அரசியல் அதிமுக்கியஸ்தர்களும், தேசத்தின் நலனை மட்டுமல்ல தாம் சார்ந்த கட்சியின் நலனைக்கூட பொருட்படுத்தாது, சுயநலனின் அடிப்படையில் வேறு சில உள்ளகமல்லாத, புற அழுத்தங்களுக்கேற்ப கருத்திய நிலைப்பாட்டை எடுத்துக் கொள்வதானது, தன் நெஞ்சறியச் செய்யும் துரோகமாகும். இந்த 'அற்பத்தன' அரசியல் சிறிலங்காவின் அரசியல் மரபாகவே வேரூன்றி விழுதுவிடத் தொடங்கியுள்ளது என்பது பகிரங்கமான ஒன்றாகிவிட்டது.

தென்னிலங்கை அரசியலில் அது எப்படி எப்படி வடிவம் கொள்கின்றதோ அதற்கேற்ப சிறிலங்காவின் அரசியல் ஆட்சிப் பீடம் புதுப்புது வடிவங்களை எடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டு வந்துள்ளதை, கடந்தகால அரசியல் நிகழ்வுகள் தெளிவாகவே பதிவுசெய்துள்ளன.

இதேவேளை, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பூமியில் போருக்கு முந்திய அரசியல் காலத்தில் - தமிழ்த் தலைமைகளின் பங்குச்சந்தை அரசியல் போட்டிகளில் - நாற்காலிக் கனவுகளுடன் அரசியல் பண்ணியோரின் அற்பத்தனங்களின் விளைவுகள் இன்றுவரை தமிழ்மக்களின் துயரங்களின்ழூலம் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றது.

தமிழ்க் காங்கிரஸ், தமிழரசு, அடங்காத் தமிழர் முன்னணி, சுயாட்சிக் கழகம் எனப் பல்வேறு பெயர்களில் அரசியல் வியாபாரம் நடத்தியோர், தமிழ்மக்களின் உரிமைசார் விடயங்களையே விற்பனைப் பொருளாக்கிப் பேரம் பேசும் அரசியல் குதர்க்கவாதிகளாகவே தம்மை இனங்காட்டிக் கொண்டனர். எப்படியோ அவர்களின் பெரும்பான்மையோர் தமது வரலாற்றுத் தவறுகள் காரணமாகவே மறக்கப்பட்ட மனிதர்களாகிவிட்டனர். எஞ்சியுள்ள ஒரு சிலரே, இன்றும் கூட சிலர் வரலாற்றிலிருந்து பாடம் கற்கத் தவறியவர்களாக தமது துரோகச் செயற்பாடுகளைத் தொடர்ந்த வண்ணமே உள்ளனர். இவர்களைப் பட்டியலிடத் தேவையில்லை, மக்களே அறிவர்.

தமிழ்க் கட்சிகள் தமிழர் நலனுக்காகவும், அவர்களின் அரசியல் உரிமைக்காகவும், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியாக ஒன்றிணைந்தபோதும், தமிழ்மக்கள் ஒருமித்த குரலில் அவர்களுக்கு வழங்கிய ஆணை தமிழீழத்தை வென்று, தமிழர் உரிமைகளைப் பெற்றுத் தாருங்கள் என்பதாகும். ஆணையைப் புறக்கணித்த அவர்களை- போராடத் தயாராகி நின்ற இளைய தலைமுறை தூக்கியெறிந்த பின்னர், எழுதப்பட்ட சரித்திரத்தில் அவர்களில் பலர், முகமும் முகவரியும் இழந்த மனிதர்களாகினர். போர் - வரலாற்றை புதிய முறையில் உறுதியாக இரத்தத்தால் எழுதியது. ஆனால், இன்றைய சமாதானச் சூழல் அரசியலை மற்றொரு வகையில் தரிசிக்க வைத்துள்ளது.

சமாதான மழைகாலம் - அரசியல் காளான்கள் தோற்றம் காட்டத் தொடங்கியுள்ளது. கூட்டணி சிதைகிறது, மீண்டும் தழிழரசுக் கட்சி உயிர்ப்புக் கொள்கிறது என்ற சில செய்திகள் கடந்த சில தினங்களாக ஊடகங்களின் தலைப்புக்களை விழுங்கி நிற்பதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.


தமிழ்க் கட்சிகளும் தமிழ் அமைப்புக்களும் இணைந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக பரிணாமம் கொண்ட பின்னர், விடுதலைப் புலிகளின் தலைமைத்துவ நிலையை வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டு இயங்கிவரும் நிலையிலிருந்து புத்துயிரப்பு ஏற்பாடுகள் முளைவிடத் தொடங்கியுள்ளன. இந்த முனைப்பின்ழூலம் பிரச்சினையாளராக ஆனந்தசங்கரியார் இருப்பது மறக்கமுடியாத விடயமே. விரும்பியோ விரும்பாமலோ ஈழத் தமிழர்களின் தேசிய நலன்களைப் புறக்கணித்துவிட்டு விதேசிய அழுத்தங்களுக்கு ஆளானவராக அவர்களது அரவணைப்பு சுகத்திலிருந்தும் அபரிதமான ஆபத்திலிருந்தும் விடுபடமுடியாதவராக ஆனந்தசங்கரியார் செயற்படத் தொடங்கி வெகுகாலமாகி விட்டது. தமிழர் தேசிய கூட்டமைப்பின் கொள்கைகளுடன் அவர் இணக்கம் காணமுடியாது இயங்குவதற்கும் இந்த அரசியல் அனுகூலங்களை இழக்கமுடியாமையே காரணமாகும்.

இது தொடர்பாக அவர் காட்டும் காரணங்களும், வெளியிடும் நியாயப்படுத்தல்களும் அவரது அரசியல் ஸ்திரத்த தன்மையின்மையை, கொள்கைப்பிடிப்பின்மையை உறுதிப்படுத்துவையாக உள்ளன. ஆக அவர் சிறிலங்காவின் - தென் பகுதி இனவாத அரசியல்வாதிகளுக்கும் அயலக அரசியல் அபிலாஷைகளுக்கும் அனுசரணையாக செயற்படுகின்றார் போல் உணரவைக்கிறது.

இதனை அவரது அண்மைக்கால அறிக்கைகள் உறுதிப்படுத்துபவையாகவும் அமைந்துள்ளன.

அரசியல் தலைமைகளின் சுயநல - சந்தர்ப்பவாத அணுகுமுறைகள் விடுதலை - உரிமைகளுக்காகப் போராடும் மக்களுக்கு விரோதமானவை என்பது சொல்லித் தெரிய வேண்டியது ஒன்றல்ல....!

# நாடும் நடப்பும்




# முழு அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகம் தமிழ்மக்களுக்கு அமைக்கப்பட வேண்டும்!

## தமிழீழ மாணவர் பேரவை தேசியத் தலைவருக்கு கடிதம்

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் 1957 இலிருந்து ஆரம்பமாகி, இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், எந்தத் தீர்வு முயற்சியும் நிறைவான, முழுமையான அதிகாரப் பரவலைக் கொண்டிருக்கவில்லை. அவ்வாறு உருவாக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களை இலங்கையை ஆட்சி செய்த அரசுகள் அமுல்படுத்தப்படுத்தாததுடன் அவற்றை அரசியல் தங்கு நிலைகளைக் கையாள்வதற்கு மேற்கொள்கின்ற நடவடிக்கையாகவே எடுத்துள்ளன - என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அதிக நம்பிக்கையீனங்களைக் கொண்டிருக்கும் தமிழர்களாகிய நாம், தமிழீழ விடுதலைப் புலிகளால் தயார் செய்யப்பட்ட தீர்வுத் திட்டம், காத்திரமானதாகவும் வட-கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்மக்களின் நிறைவான அதிகாரப் பரவலாக்கலைக் கொண்டதாக அமையுமெனவும் எதிர்பார்க்கிறோம். அவ்வாறு விடுதலைப் புலிகள் தயாரிக்கும் இடைக்காலத் தீர்வு யோசனைகள் முதன்முதலில் தமிழர் தரப்பால் முன்வைக்கப்படுகின்றது.

அது தமிழர்களின் சட்ட, நீதி, நிர்வாக, கட்டமைப்புக்களைச் சுயாதீனமான இயக்குதிறனைக் கொண்டதாகவும் பொருளாதார, சமூக அபிவிருத்திகளை வட- கிழக்கு பிரதேச மக்கள் சுதந்திரமாகத் தீர்மானிக்கக்கூடியதாகவும் அமைக்கப்படுதல் வேண்டுமென நாம் கருதுகிறோம். அந்த வகையில் கீழ்வரும் எமது எண்ணங்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கிறோம்.

வட-கிழக்குப் பிரதேசங்களில் அமைந்திருக்கின்ற நிர்வாக அமைப்புகள், பணிமனைகள் மற்றும் நிர்வாகம் தொடர்பான அமுலாக்கங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களை நிர்வகிக்கும் அதிகாரம் இந்த இடைக்கால சபைக்கு இருத்தல் அவசியம்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலுள்ள காணிகள் அதன் அபிவிருத்திகள் மீள் உருவாக்கங்கள், கைமாற்றங்கள் எல்லாமே இடைக்கால சபையின் அதிகாரத்திற்குட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

நிதி தொடர்பான விடயங்களில் வட-கிழக்கு இடைக்கால சபை பூரண அதிகாரமுடையதாக விளங்குதல் அவசியம். காரணம் - நிதி விடயங்களில் கடந்த காலத்தில் காட்டப்பட்ட பாரபட்சமான அமுல்படுத்தலைத் தவிர்க்கவும், சுயாதிபத்தியத்துடன் தொழிற்படவும் தேவையானவற்றில் முக்கியமானது நிதியாகும்.

நிதி விடயத்துக்காக உருவாக்கப்பட்ட அமைப்பில் உள் மட்டத்தில் நிகழும் வரிப் பிரகடனங்கள், வருமான வரி முறைகள் என்பவற்றுடன் உலக நாடுகளும், தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் நிதி, நேரடியாக இந்த இடைக்கால சபைக்குரியதாகவும் கையாளக் கூடியதாகவும் காணப்படுதல் வேண்டும்.

வட-கிழக்குப் பகுதிகளில் சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டும் காவற்துறை, நீதிமன்றங்கள் என்பவை இடைக்கால சபையின் கட்டுப்பாட்டிலிருப்பதுடன் வட- கிழக்குக்கு பொலிஸ் பிரிவு விசேடமான அதிகாரத்தையுடையதாக (பிரதேச மட்டத்தில்) உருவாக்கப்படுதல் வேண்டும்.

வட-கிழக்குப் பகுதியைப் பாதுகாக்கவும் தமிழ்மக்களின் உரிமைகளை நிலைநாட்டவும் வட-கிழக்குப் பிரதேசத்தில் தமிழ்மக்களால் உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய இராணுவப் பிரிவு ஒன்று இயங்குவதும், அது சுதந்திரமாக இயங்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இது சுவிற்சர்லாந்து நாட்டிலுள்ள கன்ரன்கள் ஒவ்வொன்றும் தமக்கெனப் பாதுகாப்புப் படைகளை வைத்திருப்பதுபோல் அமைக்கப்பட வேண்டும்.

இந்த இடைக்கால சபை ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளினதும் அவர்களது அரசியல் பிரிவுகளுடனும் இயங்குவதுடன் அக்காலப் பகுதியில் ஏற்படும் ஜனநாயக விருத்திகளைக் கொண்ட அடுத்த கட்ட தேர்தலுக்கூடாக வட-கிழக்குப் பகுதி செயற்படுதல் வேண்டும்.

உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் இதர வர்த்தக நடவடிக்கைகள், போக்குவரத்து எனப் பொருளாதார அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் முழு அதிகாரமும் இடைக்கால சபையிடம் இருத்தல் வேண்டும்.

வட-கிழக்கு நிலப்பரப்பு மட்டுமன்றி கடற்பரப்பு, ஆகாயம் போன்ற பகுதிகள் இடைக்கால நிர்வாகசபையின் அதிகாரத்திற்குட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

உலக நாடுகளின் முதலீடுகள் நேரடி வருகைகள் மற்றும் வெளிநாடுகளது நடவடிக்கைகள் அனைத்தும் இடைக்கால சபையின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாகவே அமைத்தல் வேண்டும்.

எனவே, வட-கிழக்குப் பிரதேசத்துக்கான அதிகாரம் முழுமையானதாக அமைவதுடன், அமுலாக்கலை நிலைப்படுத்துகின்ற வலுவையும் கொண்டதாக அமைந்திருத்தல் அவசியம். தமிழ் பேசும் மக்கள் எல்லோரது நலன்களையும் கருத்திற்கொண்டு சட்ட நெழிவுகள், சுழிவுகளைத் தவிர்த்துத் தத்துவார்த்த நோக்கில் இயல்பு நிலையிலும் பாதுகாப்பை ஏற்படுத்தக்கூடியதாக இடைக்கால சபை அமைந்திருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைதிகளுக்கு போதைவஸ்து வழங்கிய பெண் கைதானார்!

## மகசீன் சிறைச்சாலையில் சம்பவம்

(கொழும்பு)

மகசீன் சிறைச்சாலையிலிருக்கும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவருக்கு போதை மருந்து வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டார்.

மகசீன் சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு போதைவஸ்து வழங்குவதை இந்தப் பெண் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்தப் பெண்ணைக் கைது செய்த பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இது தெடர்பான விசாரணைகள் இன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவரை இந்தப் பெண்ணை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை, சிறைச்சாலையில் போதைவஸ்துப் பாவனை அதிகரித்து வருவதை அடுத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விடுத்த பணிப்பின் பேரில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாகவே இந்தப் பெண்மணி கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (01)

# நாடாளுமன்ற உறுப்பினர்களை கனேடிய சபாநாயகர் சந்தித்தார்!

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ள கனேடிய சபாநாயகர் நேற்று முன்தினமிரவு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வில் அதிகாரப்பகிர்வு தொடர்பான ஆலோசனைக்ளையும் அதிகாரப்பகிர்வின் செயல்முறைகளையும் விளக்குவதற்காக இலங்கை வந்திருக்கும் கனேடிய சபாநாயகர், நேற்று முன்தினம் இரவுவிருந்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில், அதிகாரப்பகிர்வு தொடர்பான தனது கருத்துக்களை கனேடிய சபாநாயக்கர் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது. (01)

# இன்னல்கள் மத்தியில் வாழும் சபாபதி நலன்புரி முகாம் மக்கள்



செய்திக் கட்டுரை

**இ. விஜேந்திரன்**

வடக்கின் பல பகுதிகள் இன்று இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப் பட்டு, அதற்கு அழகாக உயர் பாது காப்பு வலயம் என பெயர் வைத்து அந்தப் பகுதி மக்களை சீரழிக்க வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தமது சொந்த நிலங்களில் தங்கள் கால்களைப் பதிக்க எமது மக்கள் பேரணிகள், மறியல் போராட் டங்கள், பகிஷ்கரிப்புக்கள், கலந்துரையாடல்கள் எனத் தங்களால் இயன்றளவு செய்துள்ளனர் - செய்தும் வருகின்றனர்.

மீள் குடியமர்வுக்கான



உரிய முறையில் நடவடிக்கை எடுப் பார்களா? இப்படி எத்தனை நாட்கள் தான் அவல வாழ்வில் இவர்கள் பயணிப்பது.?

பலாலி, காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள சிற்றூர்களான மயிலிட்டி, தையிட்டி, ஊறணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் 1990 ஆண்டு இடம்பெயர்ந்தனர். இவர்கள் பல இன்னல்கள் மத்தியில் பாட

சாலைகள், கோயில்கள், பொது இடங்களைத் தமது இருப்பிடங்களாக்கி விரும்பியோ விரும்பாமலோ தமது வாழ்க்கையை நடத்தினர்.

களுக்கு 5 குழாய்க் கிணறுகளே உள்ளன. மலசல கூடங்கள் நான்கு மட்டுமேயுள்ளன. அதிலும் இரண்டு இப்பொழுது பாவிக்கமுடியாத நிலையிலுள்ளன. இ'ந மலசலகூடங்களிலேயே இத்தனை பேரும் தமது இயற்கை உபாதைகளை நிறைவேற் றுகிறார்கள் என்றால் இவரகளின் துர்ப் பாக்கிய நிலையை என்னவென்று சொல்வது.

மழை காலம் ஆரம்பித்துள்ள தால், இந்த நலன்புரி நிலைய மக்கள் பெரும் அசௌகரியங்களைத் தாங் கிக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இங்குள்ளவர்கள் நாளாந்தம் வேலைக்குச்சென்று தமது வாழ்க்கையை நகர்த்தி வரு கிறார்கள். இதில் பெற்றோருடன் பிள் ளைகளும் வேலைக்குச் சென்று வரு வதையும் சில பிள்ளைகள் தனி யாக வேலைக்குப் போவதனையும் அவதானிக்க முடிகிறது. இங்குள்ள 18 வயதிற்கு உட்பட்டவர்களில் பெரும் பகுதியினர் கல்வியை மறந்து

ளின் கருத்து என்னவென்றால் தாங் கள் இருந்த மாதிரி வன்னியிலேயே இருந்திருந்தால் இதைவிட எவ்வளவோ மேன்மையாக இருந்திருப்போம் என்பதாகும்.

இந்த நலன்புரி நிலையத்தில் காந்தி பாலர் பாடசாலை என ஒன்று உள்ளது. இதில் 32 மாணவர்களும் 2 ஆசிரியர்களும் உள்ளனர். இங்கு ஆசிரியரும் சரி மாணவர்களும் சரி பாய்களில் அமர்ந்தே தமது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை மேற் கொள்ள வேண்டியவர்களாக உள்ள னர். பாலர் பாடசாலைக்குரிய அடிப் படை வசதிகள் ஏதுமற்ற நிலையிலே இப்பாட சாலை இயங்கிவருகிறது.

இந்த நலன்புரி நிலையத்தில் கடந்த மாதம் ஒரு துயரச் சம்பவம் நிகழ்ந்தது. இங்குள்ளவர்களில் பெரும் பாலானவர்கள் நாளாந்த உணவுத் தேவைக்கே பெரும் இடர்களை எதிர்நோக்கி, ஒரு நாளைக்கு ஒரு வேளை அல்லது இரு வேளையுடன் தமது உணவை உண்டு பழகிய வர்கள். இதற்கும் முடியாது என்று வந்த வேளை தமது அயலிலுள்ள கற்களை தோண்டி எடுத்து விற்றுள் ளார்கள். இச்செயற்பாடு முகாம் தலைவர் மூலம் உடனடியாக நிறுத் தப்பட்டது. இவர்களின் நடவடிக்கை கிராம சேவையாளர், பிரதேச செய லாளர் வரை சென்று குறித்த ஏழு

என்பது யதார்த்தமானது. இதற்கு இவர்கள் எத்தனை வருடங்கள்தான் காத்திருக்க வேண்டுமோ?

மழை காலம் ஆரம்பித்துள்ளதால், அபாயகரமான தொற்று நோய்களுக்கு இவர்கள் உள்ளாக வேண்டியவர்க ளாக இருப்பதுடன் இக்குடிசைகளும் ஊறும் தன்மையானது. இது பனை யால் வீழ்ந்தவனை மாடேறி மிதிக் கும் செயலுக்கு ஒப்பானதாக இருக்கி றது. இந்த நலன்புரி நிலையம் மக் கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சிறு கிடங்குகளையும் அடர்ந்து வளர்ந் துள்ள பற்றைகளை வெட்டி தமது சுற்றுச் சூழலை பாதுகாப்பாக வைத்தி ருந்தால் ஓரளவேனும் இழப்புக்களை ஈடுசெய்ய முடியும் என்பது முகாம் நிர்வாகத்தினின் கருத்து.

இவர்கள் இப்படித் தொடர்ந்து

கொடுப்பனவு, புனரமைப்புக்கான உதவு தொகை என உதவித் திட்டங் கள் நடைபெற்று வந்தாலும், இவற் றைப பெற்றுக்கொள்ளாது- அடிப்படை வசதிகள் அற்று, அகதி என்ற பெயருடன் நலன்புரி நிலையங்க ளில் நோய்களைத் தமதாக்கி தமது ஆயுளை விரைவுபடுத்தும் மக்கள் இன்று எமது பிரதேசங்களில் அதிக ளவில் உள்ளனர். இவர்களின் நிலை இப்படியே தொடரத்தான் போகிறதா? இதற்கு உரியவர்கள்

1996 ஆண்டு மேற்படி சிற்றூர் களைச் சேர்ந்த மக்களுக்காக சபா பதி நலன்புரி நிலையம் என்ற பெய ரில்குடிசைகள் அமைத்துக்கொடுத்தார் கள். இந்த நலன்புரி நிலையம் சுன்னாகம் தெற்கு - கல்லாகட்டுவன் என்ற இடத்தில் இயங்கி வருகிறது. இங்கு அடிப்படை வசதிகள் அற்ற நிலையில், 185 குடும்பங்களைச் சேர்ந்த 900 இற்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவை

தத்தமது குடும்பங்களை நினைத்து சுமையைத் தமதாக்கிக் கொண்டுள் ளனர். இந்த ஆண்டில் எதுவித உதவிகளும் இதுவரை இந்த மக் களை வந்தடையவில்லை. வன்னியி லிருந்து மீள்குடியமர வந்தவர்களும் தமது சொந்த இடங்களுக்குப் போக முடியாமையால் தாம் கொண்டுவந்த மரந்தடிகளைப் பயன்படுத்தி குடிசை களை அமைத்து ஏற்கனவே உள்ள வர்களின் துன்பதுயரங்களில் இவர் களும் இணைந்துள்ளனர். இவர்க

குடும்பங்களுக்கும் இறுதியாக வழங் கிய நிவாரணம் இடைநிறுத்தப்பட் டுள்ளது. இன்று வரை நிவாரணம் வழங்கப்படவில்லை.

இந்த நலன்புரிநிலைய வாழ் மக்கள் தமது சொந்த இடங்களுக் குச் செல்வார்களானால் கடற்றொ ழில், சீவல் தொழிலை மேற்கொள்ள வதுடன் காங்கேசன்துறை துறை முகத்தில் பெருமளவானோருக்கு வேலைவாய்ப்பும் கிட்டி இயல்பான வாழ்க்கையை இவர்கள் வாழ்வார்கள்

இங்கேயே இருப்பார்கள். இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உள்ள மையால் உரிய அரச அமைப்புக் களோ அரச சார்பற்ற அமைப்புக் களோ இவர்களுக்கான அடிப்படை வசதிகளை என்றாலும் செய்து கொடுப்பார்களேயானால் அந்த மக் களுக்கு பேருதவியாக அமையும். இதனை உரியவர்கள் காலந்தாழ்த் தாமல் கவனத்திற் கொண்டு, உரிய நடவடிக்கைகளை உடன் எடுப்பது மனிதாபிமானக் கடமையாகும்.

---

# தமிழினத்தின் பரம்பரைச் சொத்தான கூத்து இலக்கியம்

**திருமறைக் கலாமன்றம் அண்மையில் ஈழத்துக் கூத்து இலக்கிய விழாவொன்றை நடத்தியிருந்தது. அந்த நிகழ்வின்போது ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த கூத்துக் கலைஞர்கள் உரையாற்றியிருந்தார்கள். அவர்களின் உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட முக்கிய விடயங்கள் இங்கு தொடர்ந்து பிரசுரமாகவுள்ளன.**

(நேற்றைய தொடர்ச்சி)

பின்னர், அந்தக் கூத்து சிறப்புற நடை பெறவேண்டு மென பிரார்த்தித்து நூல் கட்டுவார்கள். அதன்போது, மத்தளக்காரர், கட்டளைக்காரர், அண்ணாவிமார் போன்ற முக்கிய மானவர்கள் முதன்மைப்படுத்தப் படுவார்கள். இத்தகையவர்கள். சமுதாய மட்டத்திலும் முக்கியமா னவர்களாகக் கருதப்பட்டார்கள். சமுதாயத்திலே நடைபெறும் திரு மணம், மரணம் போன்ற முக்கிய சம்பவங்களிலே இவர்களுடைய பங்கு பெரிதாக இருக்கும். உதா ரணமாக ஒரு திருமணம் என்று சொன்னால் கோவிலில் இருந்து மணமக்களை அழைத்து வருவ தற்கு கட்டளைக்காரர், மத்தளக் காரர் வரவேண்டும். இவர்கள் வராவிட்டால் அந்த திருமணத்திலே ஏதோ தப்பு நடந்து விட்டதாகவும், ஒவ்வாமைத் தன்மைமிக்க திரு மணம் எனவும் கருதப்படும்.

நேர்த்தி கட்டுதலை தொடர்ந்து ஏடவிழ்ப்பு நடைபெறும். ஏடவிழ்ப் பின்போது, ஊரிலுள்ள அண்ணாவி மார் அனைவரும் வரவேண்டும் என்பது கட்டாயமாகக் கடைப்பிடிக்கப் பட்டது.

ஏடவிழ்ப்பைத் தொடர்ந்து சத் தியப் பிரமாணம் எடுத்தல் நடை பெறும். இதன்போது ஏடு ஒரு மேசை மீது வைக்கப்பட்டிருக்கும். ஏட்டைத் தொடாமல், மேசையிலே கையை வைத்து "இந்தக் கூத்து அரங்கேறு வதற்கு என்னாலான முழுமையான ஒத்துழைப்பைத் தருவேன்" எனவும், "கூத்து தடைப்பட்டுப் போக நான் கார ணமாக இருக்கமாட்டேன்" எனவும் சத்தியம் செய்யப்படும். இதிலும் புனி தர்களான பாத்திரம் வகிப்பவர்கள் "கூத்து அரங்கேறும் வரையும் நான் மது, மாமிசம், போதை என்பன பாவிக்கமாட்டேன்" எனவும் சத்தி யம் செய்வார்கள்.

கூத்து ஒத்திகைக் காலத்தின் போது, புனிதர் பாத்திரம் ஏற்பவர் கள் ஊர்மக்களால் புனிதர்களாகவே மதிக்கப்படுவார்கள். அவர்களும்

அவ்வாறே நடந்து கொள்வார்கள்.

சிலர் கூத்து நிறைவுபெற்ற பின் னரும் புனிதமாக நடப்பார்கள். இதன் மூலமாக ஒரு சமுதாய மறுமலர்ச் சியை ஏற்படுத்திய வெற்றியும் கூத் திற்குச் சாரும். சத்தியப்பிரமாணம் என்பது மனமுவந்தே செய்யப்படும். வற்புறுத்தலின் பேரிலே நடைபெறாது.



சத்தியப் பிரமாணம் என்பது முடிந்த பின் பாத்திரப் பிரிப்பு இடம் பெறும். இதிலே பல சம்பிரதாயங் களைக் கடைப்பிடிப்பார்கள். ஒரு பாத்திரம் பரம்பரை பரம்பரையாக வந்தால் அது அந்தப் பரம்பரை வாரி சுக்கே அளிக்கப்படும். அவர் சில வேளைகளில் பொருத்தமற்றவராக இருப்பின், அவருடைய சம்மதத்தின் பேரிலேயே வேறு ஒருவருக்கு அந்தப்

**தொகுப்பு: இ.சர்வேஸ்**

பாத்திரம் கையளிக்கப்படும். இந்த நடைமுறை தற்போது எங்குமே இல்லை.

போரின் பாதிப்பு கூத்து இலக் கியத் துறையையும் வெகுவாகப் பாதித்துள்ளது. அனுபவம் மிக்கவர் களின் இழப்பும், இடபெயர்வும் கூத் துத் துறைக்கு இடையூறாக விளைந் தன. சிலர் இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து போய், அங்கு கூத்துத் தொடர்பான பல அனுபவங்களைப் பெற்றுவந்த நிகழ்வுகளும் உண்டு.

கூத்திலே சில முக்கியமான பத விகள் உண்டு. அதிலே "வாய் பார்த் தல், என்பது முக்கியமானது. இந்த

சொல் இன்று இழக்கமாகப் பார்க்கப் பட்டாலும், அன்று பெருமையாக பேசப்பட் டது. கூத்து ஒத்திகைகள் இடம்பெறும் போது அந்த இடத்துக்கு சிறுவர்கள், பெரியவர்கள் என பல ரும் வந்து பாடுபவர்களையும், ஆடு பவர்களையும் பார்ப்பார்கள். இவர் களே "வாய்பார்ப்பவர்கள்". இந்த வாய் பார்த்தலே பல திறமைமிக்க கூத்துக் கலைஞர்களை உருவாக்கி யுள்ளது என்பது கூட மறுக்க முடி யாததாகும்.

அந்தக் காலத்திலே பெண்கள் பொதுவாக வெளியே வரமாட்டார்கள். அவர்கள் வீட்டு வேலிகளுக்குள்ளே யிருந்தே நிகழ்வுகளை அவதானிப் பார்கள். அவர்கள் கூட சில சந்தர்ப் பங்களில், கூத்திலே பங்கேற்கும் தமது கணவன் மற்றும் அண்ணன், தம்பிமாருக்கு கூத்தைப்பற்றி கூறி வழிப்படுத்துவதும் உண்டு.

கூத்திலே அண்ணன் பாத்திரம் ஏற்றால் தம்பிக்குக்கூட கொண்டாட் டம். இதனால் பிளவுபட்டு நின்ற குடும்ப உறவுகள் கூட ஒன்றாக இணைய கூத்து வழிவகுத்துக் கொடுத் துள்ளது. இதிலே இன்னுமொரு சுவையான சேதி உண்டு.

கூத்துக் கலைஞர்களை ஒப்பனை செய்வதற்கு முன் 'மை வைத்தல்' எனும் ஒரு நிகழ்வு இடம்பெறும். இதன்போது, நாடகக் கலைஞர் விரும்பும் ஒருவர் வந்து அவரது கன்னத்திலே அரிதாரத்தை பூசிய பின்பே ஒப்பனை கலைஞர் தனது பணியை ஆரம்பிப்பார். இதனால் முரண்பாடுகள் ஏற்பட்டு பின் இணை வதற்கு விருப்பம் உள்ளவர்கள் தாம் ஒன்றாவதற்குரிய சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்துவார்கள்.

யாரும் இதன்போது, இதில் பின்னிற்கமாட்டார்கள். கூத்து தம்மாலே நின்றுபோய்விடக் கூடாது எனும் மன

நிலைதான் அதற்குக் காரணம். ஏனெனில் கூத்து தடைப்பட எவன் காரணமாக இருக்கிறானோ. அவன் மட்டுமல்ல அவனது குடும்பமுமே பாதிப்புக்குள்ளாக நேரிடும் எனும் நம்பிக்கை ஒன்று இருந்தது.

'கால் நாட்டுதல்' எனும் ஒரு நிகழ்வு உள்ளது. இந்த நிகழ்வு முடிந்துவிட்டால் ஊரே புனிதம் பெற் றதுபோல மாற்றமடையும். சாராய மது கடைகளிலே விற்பனை குறை யும். மக்களின் சேமிப்பு அதிகரிக் கும். பிற கிராமங்களில் இருந்து கூத் துக் காணவரும் தமது உறவு களை உபசரிக்கவேண்டுமென்பதற் காகவே பணத்தைச் சேமிப்பார்கள். இதன் மூலமாக மக்களின் விருந் தோம்பல் பண்பும், சேமிப்புத் திறனும் கூட கூத்து இலக்கியம் மூலம் அதி கரிக்கப்பட்டுள்ளது.

உறவுகள் அனைத்தும் ஒன்றாகச் சங்கமிக்கும்போது, பலவற்றையும் பேசுவார்கள். இதனால் பல திரு மணங்கள் நிறைவேறும். இதன்மூலம் கூத்தினுடைய ஒரு நோக்கம் நிறைவு பெறும்.

'பந்தல் போடுதல்' எனும் நிகழ் வின்போது ஊரே திரண்டு வரும். பனங்குற்றிகளை முழுதாக வெட்டி அவற்றை நட்டு, குறுக்கு சட்டங்கள் போட்டு அதிலே பலகைகளை நிறுத்தி மேலே சாக்குப் படங்குகளை போட்டு மண்ணைப் பரப்புவார்கள்.

இது ஒரு பாரிய வேலை. இதற்காக "ஊர் மறியல்" எனும் நிகழ்வு நடை பெறும். கோவிலிலே மணியோசை கேட்டு "ஊர் மறியல்" இன்று என அறிவித்துவிட்டால் எவரும் தமது தொழில்களிற்குச் செல்லக் கூடாது. அவ்வாறு சென்றால் அவர்களது அன்றைய வருமானம் பறிமுதல் செய் யப்படும். இவ்வாறு பந்தல் போடுதல் முடிவடைந்ததும்,

"காப்புக் கட்டுதல்" நடைபெறும். இதற்கு பந்தல் அண்ணாவியார் எனும் ஒருவர் இருப்பார். அவர் தனக்கு தெரிந்த மந்திர உச்சாடனங்களை கூறி, எதுவித இடையூறுகளும் ஏற் படாத வண்ணம் காப்புக் கட்டுவார். இந்த முறையும் தற்போது இல்லை.

இது முடிந்த பின்னர் 'கெச்சை கட்டுதல்' எனும் நிகழ்வு நடைபெறும். கச்சை கட்டுதல் என்பதே மருவி கெச்சை கட்டுதல் என ஆயிற்று. இதன்

போது முதன் முதலாக கூத்திலே பங்கேற்பவருடைய வீட்டிற்கு அனைத்து அண்ணாவிமார்களும் செல்வார்கள். அங்கு கூத்திலே அரங்கேறுபவர் வெற்றிலையிலே சலங்கை ஒன்றை வைத்து, வந்திருப்பவர்கள் எல்லோ ரிடமும் நீட்டுவார். அவர்கள் தொட்டு வணங்கிய பின்பு, ஆட்ட அண்ணா வியார் அதனை கலைஞரின் காலிலே கட்டுவார். பாடல் அண்ணாவியார் பாட கலைஞர் ஆடுவார். இதன்போது, உற்றார், உறவினர் என பலரும் வந் திருப்பதால், அவரது கூச்சம் தெளிந்து விடும். இதற்காகவே இந்த நிகழ்வு இடம்பெறுவதாகக் கருதப்படுகிறது.

இதன்போது புதிய கலைஞர், வந்திருக்கும் வயதிலே முதிர்ந்த அனைவரினதும் காலிலே விழுந்து ஆசிபெறுவார். இதன் மூலம் பெரிய வர்களை மதிக்கும் பண்பும் ஏற் படுத்தப்பட்டது.

இவையெல்லாம் நிறைவுபெற்ற பின்னர் அரங்கேறுவதுதான் மிச்சம். ஒவ்வொருவரும் புதிதாக அரங்கேறும் போது, 'பட்டாசு கொளுத்தி ரசிகர் கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்து வார்கள். அந்த ஆதரவு கலைஞர் களை உற்சாகப்படுத்தும்.

ஓரிரவு, இரு இரவு கூத்துக்கள் என்பதால் ஒரு பாத்திரத்தை மூவர் ஏற்பார்கள். ஒவ்வொருவரும் மேடை யில் புதிதாக வரும்போது பட்டாசு கொளுத்தப்படும்.

## கூத்து இலக்கியம்

மற்றையதொரு முக்கியமான நிகழ்வு, அன்று எவராக இருந்தா லும் மேடையை விட்டு இறுதியாக அகலும்போது மங்கள கவிபாடி இறைவனை வேண்டியே நிறைவு செய்வார்கள். அவர் இறந்தவராகக் காட்டப்பட்டாலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. தற்போது இதுவும் மாற்றம்பெற்று இறுதியிலேயே மங்கள கவி பாடுவதாக உருவாகியுள்ளது.

அத்துடன், அன்று பாடல்களைப் பாடும்போது, மிகக் கவனமாக இருப் பார்கள். நேர்த்திக்காகச் செய்யப்படு வதால் பிழை விடமாட்டார்கள். பிழை விட்டாலும் திரும்பப் பாடவைக்கப் படும். அன்று அவ்வளவு கட்டுக்கோப் பாக கூத்துக்கலை பேணப்பட்டது.

இவ்வாறு பேணப்பட்ட எமது பாரம் பரிய கலையைத் தொடர்ந்தும் பேண நாம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டி யது அவசியமாகும். (தொடரும்)

# ஈராக்கை கட்டியெழுப்பும் புதியதிட்டம்; விவாதம் நேற்றிரவு ஐ.நா. சபையில்!

ஈராக்கின் எதிர்காலத்துக்கான - மீண்டும் திருத்தியமைக்கப் பட்ட திட்டக்குறிப்பை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் அங்கீகாரத்திற்கான வாக்கெடுப்பு புதன்கிழமை நடாத்தப்படவுள்ளது.

ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் தெரிவித்த கருததுக்களும், புதிய வரைபில் இணைக் கப்பட்டுள்ளது.



நேற்று இரவு பாது காப்புச் சபையின் அங் கத்தவர்கள், பெரும் பான்மையான நாடுக ளின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு எடுக்கப்படவேண்டிய மாற்றங்கள் தொடர் பாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.


இந்தப் புதிய வரைபில், ஈராக்கிய மக்களிடம் இறைமை மிக்க ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கு, எப்போது இந்த வரைபு கையளிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படவில்லை.

இந்தப் புதிய வரைபு பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளைத் திருப்திப்படுத்துமா எனத் தெரியவில்லை என்று பி.பி.ஸி. இன் கிரெக் பரோ ஐக்கிய நாடுகள் சபையில் தெரிவித்தார்.

இந்தப் புதிய திட்ட வரைபை, வீட்டோ அதிகாரத்தை பாவித்து எந்த நாடும் புறக்கணிக்கப்போவதில்லை எனவும், எல்லோரும் வாக்களிக்கத் தவறினால், அது செயற்படமுடியாதிருக்கலாம் எனவும், பத்திரிகை நிருபர் ஒருவர் தெரிவித்தார். இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான், மிகப் பெரிய மாற்றங்களை இப்புதிய திட்ட வரைபின் மூலம் கொண்டு வரமுடியாதெனவும், பாதுகாப்புச் சபையில் அங்கத்தவர்கள் இணைந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை உருவாக்கவேண்டும் எனவும் கேட்டிருந்தார்.

15 அங்கத்தவர்களைக் கொண்டுள்ள பாதுகாப்பு சபையில் குறைந்தது 9 அங்கத்தவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதே நேரத்தில் 5 நிரந்தர அங்கத்தவர்களில் ஒருவராவது வீட்டோ அதிகாரத்தைப் பாவிக்கக் கூடாதென்பது நிபந்தனையாகும்.

# மனிதனை ஏற்றிய விண்கலத்தை சீனா நேற்றைய தினம் அனுப்பியது



கோபி பாலைவனத்தில் உள்ள தளத்திலிருந்து ஏவப்பட்டுள்ள இந்த விண்கலம், புறப்பட்ட 10 நிமிடங்களின் பின் பூமியைச் சுற்றத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'யாங் லெவி' என்ற விண்வெளி வீரரே இக்கலத்தின் கட்டுப்பாட்டாளராக செயற்படவுள்ளார்.

கலம் 14 முறை பூமியைச் சுற்றிவருவதற்கும், 22 மணித்தியாலத்தின் பின் பூமிக்கு திரும்புவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனிடையே தளத்திலிருந்து புறப்படுவதற்கு 3 மணித்தியாலத்துகக்கு முன்பே, 38 வயதுள்ள விண்வெளி வீரர் 'யாங் லெவி' தனது 'கப்சூல்' எனப்படும் கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்வதற்கு முன் தனது பயணம் தொடர்பாக தெரிவிக்கும்போது, தனது ஒவ்வொரு கணத்திலும் கவனமாக செயற்படப் போவதாகவும், சீனாவிற்கு பெருமை தேடித்தரப்போவதாகவும், தெரிவித்திருந்தார்.

இதேவேளை - மனிதனை விண்ணுக்கு அனுப்பிய நாடுகளில்- சீனா மூன்றாவது நாடென்பது குறிப்பிடத்தக்கது.

# காஸா பிரதேசத்தில் குண்டுவெடிப்பு நான்கு அமெரிக்கப் படையினர் பலி!

அமெரிக்கப் படையின் தொடரணி ஒன்று, காஸாப்பகுதிக் குண்டுவெடிப்பில் தாக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் நான்கு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் காஸாப் பிரதேசத்தில் எறெஸ் என்ற கடவையில் வாகனங்கள் கடந்துசென்ற நேரத்தில், நடைபெற்றதாகவும், அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவின் அங் கத்தவர்கள் பிரயாணம் செய்ததாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது.



அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட சமாதானத்திற்கான பாதை வரைபை கண்காணிக்கும், கண்காணிப்புக் குழுவின் தலைவர் 'யோன் வுல்ப்' தாக்குதலில் சிக்கிய வண்டியொன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், 'வுல்ப்' தற்போது அந்தப் பிராந்தியத்தில் இல்லை என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

## உலக நோக்கு

### ஆப்கானிஸ்தானில்

# சார்செனோவில் நடந்த மோதலில் ஏழு தலிபான் போராளிகள் பலி!



முன்னர் தலிபான்களின் பிரதேசமாக அமைந்திருந்த ஆப்கானிஸ்தானின் மலைப்பிரதேசமான 'சார்செனோ'வில் நடைபெற்ற மோதலில் 7 தலிபான் போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்க ஆப்கான் படையினர் தலிபான்களுக்கு எதிராக நடத்திய இந்தப் போரில், 3 ஆப்கானிஸ்தானிய போர்வீரர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். அண்மையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் மேலதிக சர்வதேச படைகள், தலைநகர் காபூலுக்கு வெளியேயும் பாதுகாப்பு கடமைக்காக அனுப்பப்படவுள்ளதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

100 இற்கு மேற்பட்ட தலிபான் போராளிகளால், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆப்கான் பொலிஸ் அதிகாரி கஜி மொகமட் அக்ரார் தெரிவித்திருந்தார்.

இதேநேரத்தில் தலிபான் போராளிகள் எதுவித எதிர்ப்பினையும் மேற்கொள்ளாது மறைந்துள்ளதாகவும், அமெரிக்க படையினர் ஒவ்வொரு வீட்டிலும் சோதனைகளை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானிலுள்ள தர்ம ஸ்தாபனத்துக்கு அல் - கொய்டா அமைப்புடன் தொடர்பாம்!

## அமெரிக்கா கூறுகின்றது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இயங்கும் அல் - அக்ரார் எனப்படும் தர்ம ஸ்தாபனம் ஒஸாமா பின்லாடனின் அல் - கொய்டா அமைப்பிற்கு ஆதரவு கொடுத்து வருவதாக, அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பயங்கரவாதிகளுக்கு உதவும் ஒரு அமைப்பு எனத் தெரிவித்து, அமெரிக்க திறைசேரி அந்த தர்ம ஸ்தாபனத்தின் சொத்துக்களையும், நிதியையும் தடைசெய்துள்ளது.

இத்தடை மூலம் அல் - கொய்டா இயக்கத்திற்கு செலுத்தப்படும் நிதிக்குத் தடை ஏற்பட்டுள்ளதாக, திறைசேரி காரியதரிசி 'ஜோன் ஸ்றோ' தெரிவித்தார்.

ஈராக்கில் கடமையாற்றும் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகவும், மக்களுக்கு எதிராகவும் நடைபெறும் தாக்குதலில், ஈடுபடும் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் தெரிவித்தார். அல் - கொய்டா தீவிரவாத இயக்கத்திற்கு உதவுவதாகக் கருதப்பட்டு, சொத்துக்கள், நிதிகள் தடுக்கப்பட்டுள்ள 320 நிறுவனங்களுடன் தற்போது அல் - அக்ராரும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஊர்சுற்றி எழுதுவது

'உன்கனவில் பாம்பு துரத்துகிறது நீ ஓடுகிறாய்... குறவன் கனவில் அவன் துரத்துகிறான். பாம்பு ஓடுகிறது'

இவை 'போர்க்களப்புலவன்' காசி ஆனந்தனின் நறுக்குகளில் ஒன்று.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கையின்- ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா சிங்கப்பூரில் நடைபெற்ற, உலகப் பொருளாதார அமைப்பின் கிழக்காசிய பொருளாதார உச்சி மாநாட்டில் பேசியதாக, பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைப் படித்ததும் காசி ஆனந்தனின் மேற்குறிப்பிட்ட நறுக்கு நினைவுக்கு வந்தது.!

'உலகின் வேறெந்த பிராந்தியத்தைக் காட்டிலும், தெற்காசியாவே இன்று கூடுதலான முரண்பாடுகளில் சிக்கியுள்ளது. இப் பிராந்தியத்தில் மாலைதீவைத் தவிர, ஏனைய ஏழு நாடுகளும் ஆயுத தீவரவாதக் குழுக்களின் சவால்களை எதிர்நோக்கி இருக்கின்றன.

உலகின் மிகப் பயங்கரமான, கொடூரமான இரு பயங்கரவாத அமைப்புக்களான அல்கொய்டாவும், விடுதலைப்புலிகளும் பிறந்ததும், வளர்ந்ததும், செயற்படுவதும் தெற்காசியாவில்தான்' என்று ஜனாதிபதி சந்திரிகா தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக, தமது உரையை அமைத்துக் கொண்டார். அதே சமயம், கொடூரமான, பயங்கரவாத இயக்கம் என்று - விடுதலைப் புலிகளை எடுத்துக்காட்டி, அமெரிக்கா எந்தப் பெயரைக் கேட்டால் குலைநடுங்கி ஆத்திரம் கொள்ளுமோ, அந்த அல்கொய்டா இயக்கத்துடன் விடுதலைப் புலிகளையும் ஒப்பிட்டு தமது சாதுரியத்தைக் காட்டியிருக்கிறார்.

சந்திரிகா, கதிர்காமர் கம்பனியினதும் அவர்களைப் போன்ற பேரினவாதத்தைக் கக்கும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும், விடுதலைப் புலிகளை உலக நாடுகள் தடைசெய்யவேண்டும் என்ற பிரசாரத்தை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். இந்தப் பிரசாரத்திற்கு கனடா எடுபடவில்லை. ஆனாலும், இந்தப் பேரினவாத கம்பனி தனது இனவாதக் குரலை சந்தர்ப்பம் கிடைக்கும் இடங்களிலும், சமயங்களிலும் ஒலிப்பதில் சளைக்கவில்லை.

சந்திரிகா அம்மாவுக்கு இப்போது கனவில் வருவதெல்லாம் பிரதம மந்திரியின் ஆசனமும், விடுதலைப் புலிகளுந்தான்.

ஜனாதிபதி பதவியை இன்னும் இரண்டு வருடங்களில் காலி செய்ய வேண்டும், அதன்பின் பிரதம மந்திரி நாற்காலியில் அமர்ந்தால், மக்கள் தூக்கி எறியும் வரை இருக்கலாம்.

ஆனால், போர்நிறுத்தத்துடன் நாட்டில் ரணிலுக்கு ஆதரவு அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது. விலைவாசி உயர்வு, சம்பள உயர்வு ஆகிய பிரச்சினைகளை வைத்து, ரணிலை ஆட்டம் காணச்செய்யலாம். ஆனால், புலிகள் அமைதியாக இருந்து, ரணிலின் சமாதான முயற்சிக்கு வழிவிட்டுவிடுவார்களோ என்ற அச்சமும், அம்மாவுக்கு கனவில் காசியின் பாம்பு மாதிரி வருகிறதென்றார் நண்பர்.

பாம்புக்கு தலையும், மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு மாதிரி - ஜே.வி.பிக்கும், மக்களுக்கும் போக்குக்காட்ட எடுத்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

ஐ.நா. மகாசபைக் கூட்டத்தில் போய், இப்படி ஏதாவது பேசுவதுடன், உலக நாடுகளின் தலைவர்களுடனும் 'கதை' அளக்கலாம் என்று நினைத்ததும் சந்திரிகாவுக்குச் சரிவரவில்லை. சிங்கப்பூர் மகாநாட்டை விடுவாரா? அதுதான் மேலும் கொட்டியிருக்கிறார் என்றார் எதிர்வீட்டுக்காரர்.

அதுசரி, நாங்கள் ரணில் ஆட்சியை வீழ்த்தி அவரை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம். அதனால், மீண்டும் போர்வரும் என்று மக்கள் நினைக்கக் கூடாது. 'நாங்கள் போரைத் தொடங்கவிடமாட்டோம்' என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஒரு நிகழ்ச்சியில் பேசியிருக்கிறார்.

போரை மக்கள் விரும்பவில்லை என்பது இவர்களுக்கு தெரியும். ஆனால் அதிகார ஆசை விடுவதாக இல்லையே என்றார் நண்பர்.

'இவர்கள் [redacted]சியல்வாதிகள். அப்படித்தான் ஆசைப்படுவார்கள். மௌனம் காத்த கண்டி மத பீடாதிபதி, இளம் பிக்குகளின் மிரட்டலுக்கு பணிந்து நாட்டுக்கு ஆபத்து என்று குரல் கொடுத்து விட்டாரே' என்றார் எதிர்வீட்டுக்காரர்.

இனியும் அபாயச் சங்கைத் தொடர்ந்து ஊதப் போகிறாராம்.

ஆளுக்கு ஆள் ஏதோவெல்லாம் சொல்லிப் படாத பாடுபடுகிறார்கள். ஆனால், விடுதலைப்புலிகளோ அலட்டிக்கொள்ளாமல் தங்கள் வேலையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

'யார்கொலோ சதுரர்?'

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

அஸ்கிரிய பௌத்த மதபீடம் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது. அதாவது, அவர்களின் சமாதான எதிர்ப்பு நடவடிக்கைக்களுக்கு பாராட்டு கிடைத்திருக்கிறது. அமைதி, தர்மம், சமாதானம், பற்றி புத்த பகவானின் போதனைகளை பின்பற்றும் துறவிகள் எனத் தம்மைப் பிரகடனம் செய்யும் 'தம்மபத' வழிகாட்டிகள் இப்படி சமாதான - அமைதி எதிர்ப்பாளருக்குப் பாராட்டுத் தெரிவிப்பது அதிர்ச்சியான விடயம்தான்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகள் நாட்டிற்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் அஸ்கிரிய பீடாதிபதி அறிக்கையிட்டுள்ளார். அரச பீடத்தைத் துறந்து, அரசமரத்தடியை நாடி, ஞானம் பெற்ற போதி மாதவனின் அடியொற்றி செல்வோர் இப்படி அரசியல் பேசலாமா?

மேலும், ஜனாதிபதியையும் - பிரதமரையும் அழைத்து, இது குறித்து அவர் பேசவும் போகிறாராம்! மல்வத்தை பீடாதிபதியுடனும் இது குறித்து தொடர்பு கொள்ளப்போகிறாராம்...

ஶ்ரீலங்காவில் மதபீடங்கள் மெல்ல மெல்ல அரச பீடங்களாகி விடுகின்றன... அரசபீடங்கள் பொதுமக்களுக்கான பலிபீடங்களாகி வருகின்றன. என்கிறார் ஒரு முன்னாள் இடது சாரித் தோழர் கடுப்புடன்....

-தெருவாசி

# அம்பாறை மாவட்டத்தின் தற்போதய நிலவரம் புலிகள் -விசேட அதிரடிப்படையினர் ஆராய்வு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக, விடுதலைப் புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் சந்திப்பொன்று நடந்துள்ளது.

நேற்று அக்கரைப்பற்றில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில், காலை 9 மணிமுதல் நண்பகல் 1 மணிவரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தேரியா கல்வசன், உபதலைவர் அகொஸ்ரா ஆகிய இருவரது தலைமையில் நடந்த இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, அம்பாறை மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர், குயிலின்பன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஜனார்த்தனன், மாவடி முன்மாரிக்கோட்டப் பொறுப்பாளர் சுதா ஆகியோரும் - விசேட அதிரப்படையின் சார்பில் பொலிஸ் அதிகாரி எஸ்.ரி.உபுல் செனவிரத்ன, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிறிசேன, அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி அமரசிங்க, கண்ணகி கிராம பொறுப்பதிகாரி பியநந்த, திருக்கோவில் பொறுப்பதிகாரி ஹேரத், மண்டூர் பொறுப்பதிகாரி புத்தசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் பாவட்டா பகுதியில் புலிகள் புதிய முகாம் ஒன்றினை அமைப்பதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். இதற்கு மறுப்புத் தெரிவித்த புலிகள் - இது ஒரு மாவட்ட அரசியற்துறைச் செயலகம். வெளியிடங்களிலிருந்து வருவோர் சந்திப்பதற்கான ஒரு இடமே இது எனத் தெரிவித்ததுடன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இந்த இடத்தினை ஏற்கனவே பார்வையிட்டதுடன் - அவர்கள் அங்கு முகாம் இல்லை எனத் தெரிவித்ததையும் புலிகள் சுட்டிக்காட்டினர்.

திருக்கோயில் மாவட்ட வைத்தியசாலையில் இருக்கும் விசேட அதிரடிப்படை முகாம், காஞ்சிரங்குடாவில் பொதுமக்களின் வீடுகளில் இருக்கும் விசேட அதிரடிப்படை முகாம் என்பன புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அகற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இதுவரை இந்த இரு முகாம்களும் அகற்றப்படவில்லை என தெரிவித்த புலிகள், விசேட அதிரடிப்படையினரிடம் தெரிவித்தனர்.

மேற்படி விடயம் தொடர்பாக, கருத்துத் தெரிவித்த விசேட அதிரடிப்படையினர் - சில நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக, இந்த இரு முகாம்களும் இதுவரை அகற்றப்படவில்லை என்று வருத்தம் தெரிவித்ததுடன் வெகுவிரைவில் இந்த இரு முகாம்களும் வேறிடங்களுக்கு அகற்றப்படுமெனவும் தெரிவித்தனர்.

இவ்வாறான சந்திப்புக்களை இரண்டு பகுதியினரும் தொடர்ந்து நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த மாதம் 12 ஆம் திகதி கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் அடுத்த சந்திப்பை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சந்திப்புக்களை முடித்த பின்னர் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவித்த கௌசல்யன், அதிரடிப் படையினருடனான சந்திப்பு திருப்திகரமாகவும், சுமுகமாகவும் இடம் பெற்றதாகத் தெரிவித்தார். (07)

# புதிய பொலிஸ் மா அதிபரின் நியமனம் தாமதமடையலாம்!

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபரின் நியமனத்திற்கு, சில நாட்கள் தாமதமாகலாம் என தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ்மா அதிபராக இருந்த ரீ.ஈ. ஆனந்தராஜாவிற்கு, ஜனாதிபதி சந்திரிகா சேவை நீடிப்பு வழங்காததால், ஓய்வுபெற்று சென்றிருந்தார்.

இவர் வகித்துவந்த பதவிக்கு, புதிய ஒருவரை நியமனம் செய்வதில் உள்ள சிக்கல்களாலேயே இந்த நியமனத்திற்கு சில நாட்கள் தாமதமாகலாம் என கூறப்படுகிறது.

தற்போது நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சேவையில் இருப்பதாலேயே, பொலிஸ்மா அதிபரின் நியமனத்தில் தாமதம் ஏற்படுவதற்கு காரணம் ஆகும். இவர்களது சேவைக்காலங்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்குமாறு, பொலிஸ் ஆணைக்குழுவிடம் தாம் கோரியுள்ளதாக, அரசியல் அமைப்புப் பேரவையின் பேச்சாளர் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபராக, இந்திரா டீ.சில்வாவை நியமிக்க, ஜனாதிபதி சந்திரிகா சிபார்சு செய்தபோதும், இவரது சேவைக் காலத்தை காரணம் காட்டி அரசியல் அமைப்புப் பேரவை அதனை நிராகரித்திருந்தது.

இதனால், தற்போது பொலிஸ்மா அதிபரின் பணிக்ளை - உள்துறை அமைச்சின் மேலதிக செயலாளரான எம்.எம். ஜுனைட் கவனித்து வருகிறார்.

# இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டில் இந்தியாவுக்கு அதிக அக்கறை உண்டு!

## இந்திய வெளியுறவு அமைச்சர் கூறுகிறார்

இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு என்பவற்றைக் கட்டிக் காப்பதில் இந்தியா முழு அர்ப்பணிப்புடன் இருப்பதாக - கொழும்பு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்கா தெரிவித்தார்.

நேற்று கொழும்பை வந்தடைந்த, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்கா, கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையின் சமூக பொருளாதார மனித அபிவிருத்தியில் கணிசமான பங்களிப்பு வழங்க இந்தியா திடசங்கற்பம் பூண்டுள்ளது. தென் இலங்கையின் வீடமைப்புத் திட்டத்திற்கென, அண்மையில் ஒரு கோடி ரூபா அன்பளிப்புச் செய்ததுடன் - யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு ஈ.சி.ஜி. இயந்திரத்தையும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கென பஸ்வண்டி ஒன்றையும், வழங்கவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவியை அதிபர் பாலியல் வல்லுறவு

(அம்பாறை)

அம்பாறை பொத்துவில் பகுதியிலுள்ள முஸ்லிம் பாடசாலை ஒன்றில், கல்விபயிலும் ஒன்பது வயது மாணவியை பாடசாலை அதிபர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

அதிபர் தலைமறைவாகியதையடுத்து நேற்றையதினம், பொலிஸாரால் அவர் கைதுசெய்யப்பட்டு, அக்கரைப்பற்று நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஏ.வாகத் தெரிவித்தார். (07)

## படையினரின் அச்சுறுத்தலுக்கு...

உறுதியளித்திருந்தன. வழங்கிய உறுதி மொழியையும் மீறி, நேற்று காலை மக்களை அச்சுறுத்தி - நிகழ்வில் கலந்துகொள்ளவிடாது தடுத்தும் படையினர் அடாவடிகளைப் புரிந்தனர்.

மன்னாரில் முக்கிய இடங்களில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டதோடு, நிகழ்வரங்கில் குண்டு வெடிக்கும் எனவும் - மக்களை அச்சுறுத்தி உள்ளனர். பொங்குதமிழுக்குப் புறப்பட்ட மக்களை, முருங்கனில் தடுத்து நிறுத்திச் சோதனை மற்றும் ரோந்துக் கெடுபிடிகளை படையினர் மேற்கொண்டனர்.

மன்னார் டிப்போவில் பேரூந்துகளை பொங்குதமிழ் போக்குவரத்தில் ஈடுபடுத்தக் கூடாதென கூறியதோடு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து மக்கள் வந்துசெல்லவும் கட்டுப்பாடுகளை விதித்தனர். நள்ளிரவு 12 மணிவரை தடைமுகாம் ஊடாக போக்குவரத்துக்கு அனுமதிப்பதாக முதலில் ஒப்புக்கொண்டிருந்த படையினர், அதனை இரவு 8 மணியாக இறுதி நேரத்தில் மட்டுப்படுத்தினர்.

எனினும், இந்தக் கெடுபிடிகளை மீறி பல்லாயிரக் கணக்கான மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு - தமது அபிலாசைகளை வெளிப்படுத்தினர்.

## பிணையில்...

செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

அரியாலையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தின் பின்னர், அப்பகுதியில் வைத்து, 10 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 8 பேர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பிணையில் உள்ள காலப் பகுதிகளில், எதுவித சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது எனவும் - திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் நீதிமன்றத்தில் கையொப்பம் இடவேண்டும் எனவும் நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

## தென்மராட்சிக்கு...

பலத்த பாதுகாப்புடன் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களான - தனங்கிளப்பு, மறவன்புலவு ஆகிய இடங்களுக்கு சென்று அந்தப் பகுதியைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து அங்கு நிலைகொண்டுள்ள படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். அத்துடன் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள உயர்பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள ஏனைய பிரதேசங்களையும் பார்வையிட்டனர்.

இதேவேளை இந்த உயர்மட்ட இராணுவக் குழுவினர் வருவதற்கு முன்னதாக இராணுவத்தினர் அதிகமாக குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததெனவும் தெரிய வருகின்றது. (29),(202)

## காணமற்போயுள்ள...

உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி, 552ஆவது பிரிகேட் தளத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விசாரணைகளை நடத்திவருகிறார்.

## மன்னார்...

இடத்திற்குச் சென்றன. இந்தப் பேரணியில் கலந்துகொண்டோர், தேசியத் தலைவரின் உருவப்படத்தை தாங்கி வந்ததுடன், 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற கோஷங்களையும் எழுப்பினர்.

மாலை ஐந்து மணிக்கு பேரணிகள்யாவும், பொது மைதானத்தை வந்தடைந்ததும் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஈகச்சுடரினை மாவீரர் அன்சாரின் தந்தை நீக்கிலாஸ் குரூஸ் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை மாவீரர் பிலோமினாவின் தந்தை மரியாம்பிள்ளை ஏற்றிவைத்தார். பின்னர் பொங்குதமிழ் பிரகடனம் செய்யப்பட்டது. இந்தப் பிரகடனம் செய்யும் போது ஒன்றித்திருந்த மக்கள் அனைவரும் தமிழ் தேசியம், சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும், தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதையும், தாயகத்தில் இயல்பு வாழ்வு ஏற்பட சகல அதிகாரங்களோடும் கூடிய இடைக்கால நிர்வாக கட்டமைப்பு விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்திக் குரல் எழுப்பினர்.

விழாக்குழுத் தலைவர் ம.றீகன் தலைமையில் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. மலையக மக்கள் முன்னணித் தலைவரும், அமைச்சருமான சந்திரசேகரன், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரவிராஜ், துரைரட்ணசிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். நேற்றைய பொங்குதமிழ் நிகழ்வில் மாத்தறை மாவட்ட பிக்குமார் சங்கச் செயலாளர் வணக்கத்துக்குரிய களுபான பிரியர்த்ன தேரோவும் கலந்து கொண்டிருந்தார்.

தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சந்திரநேரு, சிவசக்தி ஆனந்தன், கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர். (202)

## மாம்பழம் சந்தியில்...

இந்தச் சம்பவத்தினையடுத்து, அந்த இடத்திற்குச்சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சம்பத்தில் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளையும், இளைஞனையும் அழைத்துச்சென்றுள்ளனர். (202)

## தலதாமாளிகை...

இந்தச் சம்பவத்தின் 3 ஆவது எதிரியான சு.ரவீந்திரன் தலைமறைவாகியிருப்பதால், இவருக்கு எதிராக - 15 பேரை கொல்லை செய்ததாகவும், பத்தொன்பது பேரை காயப்படுத்தியதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இவர் தலைமறைவாக இருப்பதால், இவருக்கு மரணதண்டனையும் 680 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவருடன் 3 ஆவது எதிரியான மு.தர்மலிங்கத்துக்கு, மரணதண்டனையும் 680 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. 4ஆவது எதிரியான இராமசாமிக்கு, மரணதண்டனையும் 19 பேருக்கு காயங்களை ஏற்படுத்தியதாக, 490 வருடங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதேவேளை - மேற்படி நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்போவதாக, இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அவிநாயகமூர்த்தி தெரிவித்தார். (01)

## இடைக்கால...

தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், நோர்வே வெளியுறவு அமைச்சின் இலங்கைக்கான ஆலோசகர் லிசா கோல்டன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் தரப்புக்குழுவில் கேணல் கருணா, புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி, சமாதான செயலக துணைப் பொறுப்பாளர் செல்வி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் புலிகளால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு குறித்த இறுதி நிலை தொடர்பாக- நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதற்கு தமிழ்ச்செல்வன் விரிவாக விளக்கமளித்ததுடன் இம்மாத இறுதிக்குள் நோர்வே ஊடாக அரசாங்கத்திடம் இந்தத் திட்டவரைபு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## மீளக்குடியமர்ந்த...

வழங்கப்பட்டது. இதைவிட, இந்த மாத இறுதிக்குள் ஆயிரம் குடும்பங்களுக்குரிய மீள்குடியமர்வுக் கொடுப்பனவுக்கான நிதி வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை - மொத்தமாக பத்தாயிரம் ஆயிரம் குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருத்தமான...

பூர்த்தி செய்யப்படும்.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு படைத்தளபதிகள், சிவில் சமூகத்தின் தலைவர்கள், பிரச்சினைகள் ஏற்பட்ட காலத்திலும் தொடர்ந்து அங்கு வாழந்த மக்கள் - சீர்குலைந்த வாழ்க்கையைப் புனரமைப்பதற்கு உதவுவதில் அர்ப்பணித்துப் பணிபுவோர் ஆகியோரை நான் சந்திக்க இருக்கிறேன்.

உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தினரின் கடமைகள், யாழ்ப்பாணம் இராணுவத்தளபதியின் சிக்கலான நிலைமை என்பன பற்றியும் ஆராய்வது எனது நோக்கமாகும்.

இருபது மாதங்களாக யுத்திநிறுத்தம் கடைப்பிடிக்கப்படுகின்றது. பல தரப்பட்ட தடைகள் ஏற்பட்டபோதும், நிரந்தர சமாதானத்தை நாட்டில் உருவாக்குவதற்கு இது போன்ற ஒரு தருணம் இதுவரை கிடைக்கவில்லை. இந்த நாட்டுக்கு பேரழிவைத் தந்த வன்செயல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் சகல முயற்சிகளுக்கும் கனடா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும். அடையமுடியும் என்று நாம் நம்பும் சமாதானமான சுபீட்சமான எதிர்காலத்தைநோக்கி இலங்கை மக்களுடன் பரஸ்பர நல்லிணக்கத்தோடு நடவடிக்கை மேற்கொள்ள கனடா தயாராகவுள்ளது.

சமஷ்டி அமைப்பு சம்பந்தமாக கனடாவிற்கு நீண்டகால அனுபவமுள்ளது. இன, மத, மொழி என்பவற்றினால் வேறுபட்ட மக்கள் எவ்வாறு ஒன்றிணைந்து வாழ்ந்து சுபீட்சத்தை அடைய முடியும் என்பதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். என்வே இலங்கையின் நிலைமைக்கு பொருந்திய வகையில் உருவாக்கப்படும் ஒரு வகையிலான சமஷ்டி அமைப்பு சகலரும் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.